பைஅத் (விசுவாச உடன்படிக்கை) மற்றும் அதன் எதிர்பார்ப்புகள் பக்கம் 4

இறை மன்னிப்பின் காட்சிகள் (தொடர்-4) பக்கம் 10

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-3) பக்கம் 16

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை (தொடர்-3) பக்கம் 19

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil


Nubuwwat Vazhi | March 2022 | Issue No. 4

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

[1835-1908]





# திருக்குர்ஆன்

هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِنْهُمْ يَتْلُو عَلَيْهِمْ
آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ
وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلَالٍ مُبِينٍ - وَآخَرِينَ
مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ


அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு – அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் – அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமைமிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (62:3,4)



# ஹதீஸ்

حَدَّثَنِي عَبْدُ الْعَزِيزِ بْنُ عَبْدِ اللَّهِ، قَالَ حَدَّثَنِي سُلَيْمَانُ بْنُ بِلاَلٍ، عَنْ ثَوْرٍ، عَنْ أَبِي الْغَيْثِ، عَنْ أَبِي هُرَيْرَةَ، رضى الله عنه قَالَ كُنَّا جُلُوسًا عِنْدَ النَّبِيِّ صلى الله عليه وسلم فَأُنْزِلَتْ عَلَيْهِ سُورَةُ الْجُمُعَةِ {وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ} قَالَ قُلْتُ مَنْ هُمْ يَا رَسُولَ اللَّهِ فَلَمْ يُرَاجِعْهُ حَتَّى سَأَلَ ثَلاَثًا، وَفِينَا سَلْمَانُ الْفَارِسِيُّ، وَضَعَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَدَهُ عَلَى سَلْمَانَ ثُمَّ قَالَ " لَوْ كَانَ الإِيمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهُ رِجَالٌ ـ أَوْ رَجُلٌ ـ مِنْ هَؤُلاَءِ ".

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்களுக்கு சூரா ஜுமுஆ அருளப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ‘‘மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்)’’ (62:4) என்ற வசனத்தை ஓதியதும் நான், ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்கள் யார்?’’ என்று கேட்டேன். நான் எனது கேள்வியை மூன்று முறை கேட்கும் வரையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதில் கூறவில்லை. அந்த சமயத்தில் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் எங்களுடன் இருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர் மீது கை வைத்தவர்களாக ‘‘ஈமான் சுரைய்யா நட்சத்திரம் வரை சென்றுவிட்டபோதிலும் இவரது வம்சத்திலிருந்து ஒருவர் அல்லது பலர் அதனை திரும்பக் கொண்டு வருவர்’’ என்று கூறினார்கள். (புகாரி – ஹதீஸ் எண். 4897)



# ரஷ்யா - உக்ரைன் போர் தொடர்பாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் + உலகளாவிய தலைவர், ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை

ரஷ்யா-உக்ரைன் போர் தொடர்பாக, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர், ஐந்தாவது கலீ·.பா, ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் கூறியதாவது:

இருபதாம் நூற்றாண்டில் பேரழிவை ஏற்படுத்திய இரண்டு உலகப் போர்களிலிருந்து பெற்ற படிப்பினைகளை, நாம் கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் பல ஆண்டுகளாக உலகின் வல்லரசுகளை எச்சரித்து வருகிறேன். இது சம்பந்தமாக, கடந்த காலங்களில், சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் உண்மையான நீதியைக் கடைப்பிடிப்பதன் மூலம், உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, தங்களது நாட்டிற்காக மட்டுமுள்ள சுயநலன்களை விட்டுவிட வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். மிகவும் வருந்தத்தக்க வகையில், இப்போது உக்ரைன் நாட்டில் ஒரு போர் தொடங்கியுள்ளது. இதனால், நிலைமை மிகவும் மோசமானதாகவும் ஆபத்தானதாகவும் மாறிவிட்டது. மேலும், ரஷ்ய அரசாங்கம் எடுத்து வைக்கும் அடுத்த அடிகள் மற்றும் நேட்டோ மற்றும் பெரும் வல்லரசுகளின் நடவடிக்கையைப் பொறுத்து இப்போர் இன்னும் பெரிதாகக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன. கேள்விக்கிடமின்றி, இந்த பிரச்சனை அவ்வாறு பெரிதாகும் பொழுது, அதன் விளைவு-களும் பயங்கரமானதாகவும், மாபெரும் அழிவுக்குரியதாகவும் இருக்கும். எனவே, மேலும் போர் மற்றும் வன்முறை தொடராமல் தவிர்ப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. உலகம் பேரழிவின் விளிம்பில் இருந்து பின்வாங்கி விடுவதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது, எனவே, மனித குலத்தின் நன்மைக்காக, ரஷ்யா, நேட்டோ மற்றும் அனைத்து பெரிய வல்லரசுகளும் மோதலைத் தணிக்க முயல்வதிலும், பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வு காண்பதிலும் தங்கள் அனைத்து முயற்சிகளையும் ஒருமுகப்படுத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில், உலக அமைதிக்கு முன்னுரிமை அளிப்பதன் பக்கமும், அவர்களின் தேசிய நலன்கள் மற்றும் பகைமைகளை, அனைத்து மனிதகுலத்தின் நலனுக்காக ஒதுக்கி வைப்பதன் பக்கமும், உலக அரசியல் தலைவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டுமே என்னால் முடியும். எனவே, உலகத் தலைவர்கள் அறிவுப்பூர்வமாகவும், ஞானத்துடனும் செயல்பட்டு மனிதகுலத்தின் முன்னேற்றத்-திற்காகப் பாடுபட வேண்டும் என்பதே எனது உள்ளார்ந்த பிரார்த்தனையாக இருக்கின்றது.

போர், இரத்தம் சிந்துதல் மற்றும் அழிவுகளின் வேதனையிலிருந்து இன்றும் எதிர்காலத்திலும் மனித குலத்தைக் காப்பாற்றிடவும், பாதுகாக்கவும் உலகத் தலைவர்கள் ஊக்கத்துடன் பாடுபட வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன். எனவே, பெரும் வல்லரசுகளின் தலைவர்களும் அவர்களின் அரசாங்கங்களும் நமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அடுத்த தலைமுறையினரின் எதிர்காலத்தையும் அழிக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்று என் இதயத்தின் ஆழத்தில் இருந்து பிரார்த்திக்கிறேன். மாறாக, அவர்களின் ஒவ்வொரு முயற்சியும், உந்துதலும் நம்மைப் பின்தொடர்ந்து வரும் சந்ததியினருக்கு அமைதி மற்றும் வளம் நிறைந்த உலகத்தை விட்டு செல்வதை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.

உலகத் தலைவர்கள், காலத்தின் தேவைக்கு செவிசாய்ப்பதோடு, எல்லாவற்றிற்கும் மேலாக, உலகின் நிலையான அமைதியை உறுதிப்படுத்த வேண்டிய அவர்களின் கடமைக்கும் மதிப்பளித்திட வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அனைத்து அப்பாவி மக்களையும், பாதுகாப்பற்ற மக்களையும் பாதுகாப்பானாக, உலகில் உண்மையான மற்றும் நிலையான அமைதி நிலவட்டுமாக! ஆமீன்.

(அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பத்திரிகை வெளியீடு, நாள்: 24.02.2022)

# பைஅத் (விசுவாச உடன்படிக்கை) மற்றும் அதன் எதிர்பார்ப்புகள்

## - - - ஆக்கம்: அல்லாமா எச்.எம். தாரிக் சாஹிப் - - -

**தமிழாக்கம்: முரப்பி மஹ்மூது அஹ்மது அப்துல்லாஹ், காதியான்**




★ கீழ்ப்படிதல் என்பது ஒருவர் தன் விருப்பத்திற்கேற்ப கட்டளைகளைப் பின்பற்றுவது என்பதன்று.
- ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி).

★ கிலாபத்திற்கு எதிராக கண்ணியமில்லாது செயல்படுபவர்களின் நல்ல முடிவுகளை நான் ஒருபோதும் காணவில்லை.
- ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹ்).

★ கீழ்படிதலின் தரத்தை அடையுங்கள். காலத்தின் கலீ∴பா அல்லது நிஸாமே ஜமாஅத் (ஜமாஅத்தின் கட்டமைப்பு) கூறும் கட்டளைகள் தமது விருப்பத்திற்கு ஏற்ப இருந்தால் மட்டும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்று நடப்பது என்பது கீழ்படிதல் அல்ல.
- ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்).

### பைஅத்தின் அகராதி பொருள் மற்றும் சொற்பொருள்

பைஅத் என்ற சொல் அரபு மொழியில் விற்பது என்று பொருள்படும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு, அன்னாருக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல் மற்றும் பைஅத்தின் உறுதிமொழி எடுப்பதை குறித்து அல்லாஹ், அதை ஓர் "ஒப்பந்தம்" என்று விளக்கியவாறு இவ்வாறு கூறுகிறான்:

اِنَّ اللّٰہَ اشۡتَرٰی مِنَ الۡمُؤۡمِنِیۡنَ اَنۡفُسَہُمۡ وَ اَمۡوَالَہُمۡ بِاَنَّ لَہُمُ الۡجَنَّۃَ ؕ

நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு சுவர்க்கம் அளிப்பதற்கு ஈடாக அல்லாஹ் அவர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும், அவர்களின் பொருள்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டான். (திருக்குர்ஆன் 9:111) பிறிதோர் இடத்தில் இந்த அற்புதமான பைஅத்தின் மகத்துவம் பற்றும் புகழை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றான்:


اِنَّ الَّذِیۡنَ یُبَایِعُوۡنَکَ اِنَّمَا یُبَایِعُوۡنَ اللّٰہَ ؕ یَدُ اللّٰہِ فَوۡقَ اَیۡدِیۡہِمۡ

உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்பவர்கள், அல்லாஹ்விடமே உடன் -படிக்கை செய்கின்றனர். அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளின் மேல் இருக்கிறது. (திருக்குர்ஆன் 48:11)

ஒவ்வொரு காலத்தின் நபியுடன் இவ்வாறே பைஅத்தின் உடன்படிக்கையினை செய்து அவரை ஏற்று நடப்பவர்கள் தங்களால் முடிந்தவரை அதனை நிறைவேற்றும் நற்பாக்கியத்தை பெற்றனர். ஆனால் நபிமார்களின் தலைவர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தோழர்களாகிய முஹாஜிரீன்களாக இருக்கட்டும்; அன்சாரியாக இருக்கட்டும். அனைவரும் நற்குணத்துடனும், நெகிழ்ச்சியுடனும் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றினார்கள். இதில் வாழ்த்துக்குரிய விஷயம் என்னவென்றால் அர்ஷிற்கு சொந்தமான இறைவனும் கூட அவர்களை "ரலியல்லாஹு அன்"ஹும் வரலூ அன்ஹ்" என்று கூறி தமது பொருத்தத்தின் கிரீடத்தை அவர்களுக்கு அணிவித்தான். மேலும் சுவர்க்க வாழ்க்கையை அருளினான். அவர்களுக்கு சுவர்க்கத்தின் நற்செய்தியை வழங்கி மாபெரும் உயந்த அந்தஸ்தை வழங்கினான். நபி (ஸல்) அவர்களோடு செய்த உடன்படிக்கையிலிருந்து நபித்தோழர்களை எந்தவொரு சக்தியும் விலக்க முடியாது. உன்னதமான மென்மை குணத்துடன் இறைவனின் இந்த விசுவாசமுள்ள அடியார்கள் தீயவர்களின் வாளினால் பலியிடப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் மனம் தளர்ந்து விடவில்லை. அவர்கள் குர்பானி போன்று பலியிடப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் ஐயோ! என்று கூட கூறவில்லை. அவர்கள் மரணத்தின் கண்களை நேருக்கு நேர் பார்த்தவாறு சிரித்த முகத்துடன் வாள்களின் முன் நின்றார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களோடு செய்த உடன்படிக்கையில் எந்தவொரு குறைவும் ஏற்பட விடவில்லை.

பத்ர் போரின் ஆபத்தான சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களின் இந்த வரலாற்று வார்த்தைகள் மதீனாவின் அன்ஸாரின் கீழ்ப்படிதலையும் தியாகத்தையும்

என்றென்றும் நிரூபித்து விட்டன. அதாவது (அவர்கள் கூறினார்கள். யா ரஸூலல்லாஹ் (ஸல்)! போர் நிகழ்ந்தால் பிறகு நாங்கள் ‘.ஃபத்ஹப் அன்(த்)த வரப்பு(க்)க .ஃப கா(த்)திலா இன்னா ஹாஹுனா காயிதூன்’ என்று மூஸா (அலை) அவர்களின் தோழர்களைப் போன்று கூற மாட்டோம் மாறாக இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களின் வலப் -பக்கத்திலும், இடப்பக்கத்திலும் சண்டை இடுவோம். அல்லாஹ்வின் தூதரே! உங்களைத் துன்புறுத்த வந்த பகைவன் எங்கள் பிணங்களைக் கடந்து சென்றா -லொழிய உங்களை அடைய முடியாது. அல்லாஹ்வின் தூதரே! போர் என்பது சாதாரணமான விஷயம். இங்கிருந்து சற்று தொலைவில் கடல் உள்ளது. கடலில் குதிக்கும்படி கட்டளை இட்டாலும் எந்த தயக்கமும் இல்லாமல் நாங்கள் கடலில் குதிப்போம். (சீரத் ஹல்பியா பாகம் 1 பக்கம் 453)



நபித்தோழர்கள் பைஅத் உடன்படிக்கையில் வெற்றி பெற்றதை இக்காட்சியின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்: அதாவது மது ஹராம் ஆக்கப்படுவதற்கு முன்புள்ள காலம். ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்களின் வீட்டில் மக்கள் கூட்டம் கூடி இருந்தார்கள். விருந்து உபசரிப்பிற்காக முறைப்படி மதுவும் வைக்கப்பட்டு வந்தது. இதே நேரத்தில் மதீனா வீதியில் ஒரு அழைப்பாளர் இவ்வாறு செய்தி அறிவித்தார். அதாவது, மக்களே! கேளுங்கள். மது ஹராம் ஆக்கப்பட்டுவிட்டது. இந்த அறிவிப்பை கேட்டதுமே அபு தல்ஹா (ரலி) அவர்கள் மது வழங்கி கொண்டிருந்த இளைஞனுக்கு, மது பானையை உடைத்து விடு. மேலும் அனைத்து மதுவையும் கொட்டி விடு என்று கட்டளை இட்டார்கள். அந்த இளைஞரும் உடனே அதன்படி அமல் செய்தார். ஒரு சில நொடியில் மதீனா வீதியில் இந்த மது பெருக்கெடுத்து ஓடியது. மேலும் எவரும் அந்த செய்தியை அறிவித்தவரிடம் திருப்பி எந்த கேள்வியும் கேட்கவில்லை. எவ்வித தயக்கமுமின்றி அந்த அறிவிப்பு நிறைவேற்றப்பட்டது. (புகாரி, கிதாபுத் த.ஃப்ஸீர், சூரா மாயிதா)

மது தாராளமாக ஊற்றிக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது கட்டுப்படுதலின் மிக மேலான முன்மாதிரி வெளிப்பட்டது. இதை காணும் போது மிகுந்த வியப்பு தோன்றுகிறது. ஓர் அறிவிப்பாளரின் அறிவிப்பின் பேரில், மது ஜாடிகளை உடைத்ததுடன், எந்த வகையான சரிபார்ப்பு மற்றும் ஆய்வை மேற்கொள்ளாமல், கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கே முன்னுரிமை அளித்த விதம் கீழ்ப்படிதலுக்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு ஆகும். இவ்வாறான கீழ்ப்படிதலின் முன்னுதாரணம் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் பைஅத் உறுதிமொழியைக் வெளிப்படுத்திக் காட்டிய, பயிற்சி பெற்ற (அன்னாரின்) அடியார்களிடம் மட்டுமே காணப்படு -கின்றன.

நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிவதற்கான மற்றொரு எடுத்துக்காட்டைப் பாருங்கள்: நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிது நபவியில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது அவர்கள் அமருங்கள் என்று கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் பிரசங்கத்தைக் கேட்க வந்து கொண்டிருந்தார்கள். அவர் அப்படியே மஸ்ஜிதுக்கு வெளியே அமர்ந்து விட்டார். கீழ்ப்படிதலின் இந்த அற்புதமான உதாரணத்தைப் பார்த்து அன்னார் (ஸல்) கூறினார் -கள்: அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி)! எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களின் கீழ்ப்படிதலின் ஆர்வத்தை மேம்படுத்துவானாக. (அஸாபா பாகம் 4 பக்கம் 66)

## நபித்தோழர்கள் தமது எஜமானுடன் கொண்ட ஒப்பற்ற நேசம்

நிராகரிப்பாளர்களும் நபித்தோழர்களின் உயிர்த் தியாகம் மற்றும் விசுவாசத்தைக் கண்டு பிரமித்தனர். ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின் போது, மக்கத்து இணைவைப்பாளர்களின் ஒரு தலைவர் உருவா பின் மஸ்வூது, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சமரசம் செய்ய வந்தார். திரும்பி வந்த அவர், நபி (ஸல்) அவர்களின் அடிமைகளின் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் பற்றி குறைஷிகள் முன் சாட்சியமளித்தது சிந்திக்கத்தக்கதாகும்.

“என் சமுதாய மக்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக, நான் அரசர்களின் அரசவைக்கு சென்றிருக்கிறேன். நான் கைசர், கிஸ்ரா மற்றும் நஜாஷி அரசரிடமும் சென்றிருக்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை மதிக்கும் அளவுக்கு எந்தவோர் அரசரையும் அவர்களின் தோழர்கள் மதித்ததாக நான் பார்த்ததில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் (முஹம்மது) எச்சிலை உமிழ்ந்த போதெல்லாம், அது தோழர்களில் ஒருவரின் கைகளில் விழுந்தது. அதை அவர்கள் தமது முகத்திலும் உடலிலும் தடவிக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் தோழர்களுக்கு கட்டளையிட்டால், அதை கீழ்ப்படிந்து நடப்பதற்காக அவர்கள் ஓடுகிறார்கள். அவர்கள் உளு செய்யும் போது, அவர்கள் அந்த உளுவின் தண்ணீருக்காக தங்களுக்குள் சண்டையிடும் நிலை ஏற்பட்டது.

மேலும் அவர்கள் பேசும் போது, தோழர்கள் அவர்களுக்கு முன்னால் தங்கள் குரலைக் தாழ்த்திக் கொள்கின்றார்கள். மரியாதைக்காக அவர்களை (முஹம்மது ஸல் அவர்களை) தமது பார்வையை நேருக்கு நேர் வைத்து பார்ப்பதில்லை. அவர்கள் உங்களுக்கு ஒரு நல்ல கட்டளையை வழங்கியுள்ளார். அதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். (புகாரி, கிதாபுஷ் ஷுரூத், பாப் அஷ்ஷுரூத் ஃபில் ஜிஹாத்)

இக்காலத்தில் ஹஸ்ரத் மாநபி (ஸல்) அவர்களின் ஆன்மீக புதல்வர் ஹஸ்ரத் மஸீஹ் மற்றும் மஹ்தி அவர்களின் கரங்களில் பைஅத் செய்த உண்மையான அடியார்களும் கூட பைஅத்தின் உன்னதமான முன்னுதாரணம் மற்றும் ஒரு தனித்துவமான வழிமுறையை நிறைவேற்றிக் காட்டினார்கள். இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களின் செய்த பைஅத் உறுதிமொழியை இறுதி மூச்சு வரை நிறைவேற்றி வந்தார்கள். இவ்வாறு ஏன் நிகழாது!?

தூய மஸீஹ் அவர்கள், அவர்களுக்கு கீழ்ப்படிதலின் உண்மையான பொருளை புரிய வைத்தவாறு கூறுகின்றார்கள்: "கீழ்ப்படிதல் என்பதும் ஒரு மரணம் ஆகும். எவ்வாறு ஓர் உயிருள்ள மனிதனின் தோல் உரிக்கப்படுமோ அவ்வாறானது இந்த கீழ்படிதல் ஆகும்." (மல்ஃபூஸாத் பாகம் 4 பக்கம் 74)

ஜமாஅத் அஹ்மதிய்யாவின் நிறுவுனர் அவர்கள் தனது ஜமாஅத்தில் நுழைவதற்காக, காலத்தின் தேவைக்கு ஏற்ப, இஸ்லாமிய போதனைகளின் சுருக்கத்தின் அடிப்படையில் நிபந்தனைகளை அமைத்தார்கள். இந்த விசுவாச உறுதிமொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்: "உண்மையில், முதல் வாழ்க்கையில் மரணித்து ஒரு புதிய வாழ்க்கையை தொடங்கும் ஒருவர்தான் பைஅத் செய்பவராகிறார். ஒவ்வொரு விஷயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்." (மல்ஃபூஸாத் பாகம் 2 பக்கம் 257, வெளியீடு 2003)

மறுபுறம், பைஅத் உறுதிமொழியின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாதவர்களுக்கும் அன்னார் இவ்வாறு அறிவுறுத்தினார்கள்: "பைஅத்தின் உண்மைத்துவம் என்னவென்றால், பைஅத் செய்பவர் தனது உள்ளத்தில் உண்மையான மாற்றத்தையும் இறையச்சத்தையும் உருவாக்க வேண்டும்..... உண்மையான நோக்கத்தை அறிந்து உங்கள் வாழ்க்கையில் ஒரு தூய முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அப்படி இல்லாவிட்டால், பைஅத்தால் எந்தப் பயனும் இல்லை. மாறாக, இந்த பைஅத் அவருக்கு வேதனைக்கான காரணமாக அமைந்து விடும். ஏனென்றால் ஒப்பந்தத்தை வேண்டுமென்றே, தெரிந்தே மீறுவது மிகவும் ஆபத்தானதாகும்." (மல்ஃபூஸாத் பாகம் 5 பக்கம் 604-605, வெளியீடு 2003)

காலத்தின் மஸீஹின் அருள் பெற்ற கரத்தில் முதன்மையாக பைஅத் செய்யும் நல்வாய்ப்பு பெற்றவர்களும் கூட இந்த தூய அறிவுரையைக் கேட்டு அல்லாஹ்வுக்கும் அவனது அடியார்களுக்கும் செலுத்த வேண்டிய கடமைகளை நிறைவேற்றி, பைஅத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றினர்.




## அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை நிறைவேற்றும் காட்சிகள்

பைஅத் உறுதிமொழி எடுப்பவர், இறைவன் மற்றும் அவனது தூதரின் கட்டளையின்படி ஐவேளைத் தொழுகை -களைத் தொடர்ந்து நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறார். தூய ஹஸ்ரத் மஸீஹ் (அலை) தனது தோழர்களில் ஒருவரான ஷேக் ஹாமிது அலி (ரலி) பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

"நான் அவரை ஒரு நோயில் பார்த்தேன், அது மிகவும் கடுமையானது மற்றும் ஒரு கொடிய நோயாகவும் இருந்தது. மேலும் பலவீனம் மற்றும் தளர்ச்சியினால் அவர் மரணம் அடைந்தவர் போல் ஆனார். ஐவேளைத் தொழுகைகளைச் நிறைவேற்றுவதில் அவர் எந்தளவுக்கு சுறுசுறுப்பாக இருந்தார் என்றால், சுயநினைவின்மை மற்றும் பலவீனமான இந்த நிலையில் அவரால் எவ்வாறு முடிந்ததோ அவ்வாறு தொழுகையை நிறைவேற்றி வந்தார்." (இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின் பாகம் 3 பக்கம் 540)

மற்றொரு தோழர் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி அடிக்கடி சிறுநீர் கழிக்கும் துன்பத்தால் சில வேளைகளில் மயக்கம் அடைந்தார். ஆனால் தொழுகைக்காக மஸ்ஜிதுக்கு வருவார்.

மற்றொரு தோழர் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“காதியானில், அவர் என்னைச் சந்திக்க வந்து பல நாட்கள் தங்கியிருந்தபோது, அவர் தொழுகையை மிகவும் கவனமாக நிறைவேற்றுவதையும், நல்லடியார்களை போலவே கவனத்துடனும் ஆர்வத்துடனும் தொழுததை நான் மறைவான பார்வையால் கண்டு கொண்டிருந்தேன்.” (இஸாலா அவ்ஹாம், ருஹானி கஸாயின் பாகம் 3 பக்கம் 526-527)

“மற்றொரு தோழரான ஹஸ்ரத் மீர் நாசிர் நவாப் சாஹிப் தனது நோயின் போதும் ஜமாஅத் தொழுகைக்காக தாருஸ் ஸலாமில் உள்ள தனது வீட்டிலிருந்து பைத்துல் முபாரக் வரை நடந்து வருவார்கள்.” (அஸ்ஹாபே அஹ்மது பாகம் 7 பக்கம் 10)

“ஹஸ்ரத் முன்ஷி முஹம்மது இஸ்மாயில் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் மற்ற ஐவேளை தொழுகைகளைப் போலவே தஹஜ்ஜுத் தொழுகையையும் தவறாமல் நிறை -வேற்றி வந்தார்.” (அஸ்ஹாபே அஹ்மது பாகம் 7 பக்கம் 200)



### கீழ்ப்படிதலின் உடன்படிக்கை

பைஅத் செய்பவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்யும் சகோதர உடன்படிக்கைக்கு கட்டுப்படுவேன் என்றும், மரணம் அடையும் வரை இதில் நிலைத்திருப்பேன் என்றும், இந்த சகோதரத்துவ ஒப்பந்தத்தில் உலக உறவுகள் மற்றும் தொடர்புகள் மற்றும் அனைத்து அடிமை நிலைகளிலும் காண முடியாத அளவுக்கு உயர்ந்ததாக இருப்பேன் என்றும் உறுதிமொழி அளிக்கிறார்.


காலத்தின் மஸீஹ் (அலை) அவர்களின் அடிமைகள் அனைவரும் இதற்கு சிறந்த உதாரணங்களைக் காட்டினர். ஆனால் முதல் வரிசையில், உண்மையான நேசர் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் திகழ்ந்தார்கள். அன்னாரின் அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படியும் ஆர்வம் உச்சத்தில் இருந்தது.

இச்சம்பவம் 1891 -க்கு அருகே நடந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் மவ்லவி நசீர் ஹுசைன் (சாஹிப்) ஆகியோருக்கிடையே ஒரு விவாதம் நடக்க இருந்தது. தில்லியிலிருந்து ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிபை தந்தி மூலம் தில்லிக்கு அன்னார் அழைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் மருத்துவமனையில் மருந்துச் சீட்டு எழுதிக் கொண்டிருந்தார்கள். தந்தி வந்ததும் என்ன எழுதியிருக்கிறது? என்று கேட்டார். “தங்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உடனே டெல்லிக்கு வருமாறு கட்டளையிட்டுள்ளார்” என்று கூறப்பட்டது. ஹஸ்ரத் ஹக்கீம்-உல்-உம்மா மருந்துச் சீட்டையும் பேனாவையும் அவ்விடமே தரையில் வைத்துவிட்டு, ஷூ அணிந்து குதிரை வண்டி நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

காதியானை நோக்கி மேற்குப் பக்கத்தில், தூய்மைப் பணியாளர்களின் தெரு (பின்னர் இது தாருஸ் ஸெஹத் என்று அழைக்கப்பட்டது) அருகே சென்ற போது, படாலாவில் இருந்து குதிரை வண்டிக்காரர் ஒருவர் வந்து, ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிடம் தாசில்தார் சாஹிப் பட்டாலாவில் இருந்து ஒரு செய்தியைக் கொண்டு வந்ததாகக் கூறினார். தாசில்தாரின் மனைவி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், ஹஸ்ரத் மவ்லவி சாஹிபை அழைத்ததாகவும் தெரிய வந்தது. அன்னார் (ரலி) பட்டாலாவை அடைந்து, இந்த வாகனத்தில் நான் டெல்லிக்கு செல்ல வேண்டும் என்று தாசில் -தாரிடம் கூறினார். தாங்கள் என் மனைவிக்கு சிகிச்சை அளித்து மருந்துச் சீட்டு கொடுக்க வேண்டும்; நீங்கள் வரும் வரை குதிரை வண்டி கிளம்பாது என்றார் தாசில்தார். எனவே அன்னார் சிகிச்சைக்கான ஏற்பாடு செய்தார்கள். தாசில்தார் சாஹிப் அன்னாரை பட்டாலா இரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். மேலும் டெல்லிக்கு டிக்கெட் எடுத்து கொடுத்து நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டு அன்னாரை வண்டியில் ஏற்றினார். ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் கிளம்பிச் சென்றார்கள். வீட்டில் இருந்து எந்தப் பணத்தையும் வரவழைக்கவில்லை, (வீட்டாருடன்) ஆலோசனை கேட்கவில்லை, எந்த தகவலும் கொடுக்கவில்லை. மருத்துவமனையிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ், அன்னாரின் தியாகத்தைக் கண்டு பொருத்தமான முறையில் நடந்து கொண்டான். (அஸ்ஹாபே அஹ்மது பாகம் 7 பக்கம் 35)

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)

# மஸீஹ் மவ்வூது தினம் மற்றும் அதன் பின்னணி



மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் மார்ச் 23 -ஆம் நாளுக்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளது. மார்ச் 23, 1889 -ஆம் ஆண்டு அன்றுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹஸ்ரத் சூ.ஃபி அஹ்மது ஜான் அவர்களது வீட்டில் முதல் முறையாக பைஅத் வாங்கினார்கள். அவ்வாறே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டதும் அன்றைய தினமே. இந்த ஜமாஅத்தின் மூலமாகத்தான் அல்லாஹ் இஸ்லாத்தின் இரண்டாவது வெற்றியை நிர்ணயித்திருந்தான். இதற்கு முன்புவரை எவரேனும் பைஅத் வாங்குமாறு வற்புறுத்தினாலும் எனக்கு தற்போது அதற்கான கட்டளை கிடைக்க வில்லை என்றே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி வந்தார்கள். இதுபற்றிய அன்னாரது ஒரு கூற்று இவ்வாறு வருகிறது. “பைஅத் தொடர்பாக தற்போது வரை கண்ணியமிக்க இறைவன் தரப்பிலிருந்து எந்த தகவலும் இல்லை. எனவே அவ்வழியில் பாதம் பதிப்பது உகந்ததல்ல. லஅல்லல்லாஹு யுஹ்திஸு ப.ஃத தாலிக் அம்ரா. (இதற்குப் பிறகு அல்லாஹ் அது பற்றி கூறலாம்).”

டிசம்பர் 1 -ஆம் தேதி 1888 -ஆம் ஆண்டு அன்று அன்னார் முதல் முறையாக பைஅத் வாங்குவது தொடர்பாக ஒரு பிரசுரத்தை தப்லீக் என்ற பெயரில் வெளியிட்டார்கள். அதில் இறை கட்டளைக்கிணங்க பைஅத்திற்கான தூதுச் செய்தியை எடுத்துரைத்தார்கள். அது தொடர்பான தனது அரபி இல்ஹாமையும் குறிப்பிட்டார்கள். மேலும் “நான் இவ்விடத்தில் மற்றுமொரு தூதுச் செய்தியையும் எட்ட வைக்கிறேன். அது அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு பொதுவானதாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பானதாகவும் இருக்கின்றது.” அவர்கள் கூறுகிறார்கள்: “உண்மையை நாடுகின்றவர் எவரோ அவர் உண்மையான ஈமானையும் ,உண்மையான ஈமானிய தூய்மையைப் பெறுவதற்காகவும், இறை நேசத்தின் வழியினைக் கற்பதற்காகவும், மேலும் அசுத்தமான வாழ்க்கை மற்றும் அறிவீனமான, துரோகமானதொரு வாழ்க்கையை விட்டு விடுவதற்காகவும் என்னிடம் பைஅத் செய்யுங்கள்” என்று கூறினார்கள்.

அதற்குப் பிறகு ஜனவரி 12 -ஆம் தேதி1889 -ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது பிறந்த தினத்தன்று ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் டிசம்பர் 1 -ஆம் தேதி வெளியிட்ட பிரசுரம் பற்றிய குறிப்பை எடுத்துரைத்தவாறு பைஅத்தின் பத்து நிபந்தனைகளை எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் சுன்னத்தான இஸ்திகாராவிற்குப் பிறகு பைஅத்திற்காக வருகை தாருங்கள் என்றும் அறிவுரை கூறினார்கள்.

அதற்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் காதியானில் இருந்து லூதியானா சென்றார்கள். மேலும் மார்ச் 4 -ஆம் தேதி 1889 -ஆம் ஆண்டு பைஅத் செய்ய தயாராக உள்ளவர்களிடம் மிக முக்கிய வேண்டுகோள் என்ற ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் பைஅத்தின் நோக்கங்களை எடுத்துரைத்தவாறு, மார்ச் 25 -ஆம் தேதி வரை, தான் லூதியானாவிலேயே இருப்பேன் என்றும், பைஅத் செய்ய நாடுகின்ற மக்கள் 20 -ஆம் தேதிக்குப் பிறகு வாருங்கள் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சாஹிப் ஸனோரி அவர்களது அறிவிப்பின் அடிப்படையில் மார்ச் 23 -ஆம் தேதி 1889 -ஆம் ஆண்டு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், முதல் பைஅத் வாங்கும்போது அன்னார் ஓர் அறையில் அமர்ந்திருந்தார்கள். மேலும் ஷேக் ஹாமித் அலி சாஹிப் அவர்களிடம், நான் யாரைக் கூறுகிறேனோ அவரை அறைக்குள் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். மேலும்


முதன் முதலில் மவ்லவி ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களை உள்ளே அழைத்து அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அதே போன்று எஞ்சிய மற்ற மக்களையும் ஒவ்வொருவராக உள்ளே அழைத்து பைஅத் வாங்கினார்கள். அச்சமயம் கூறப்பட்ட பைஅத்தின் வார்த்தைகள் இவ்வாறு இருந்தன:

இன்று நான் அஹ்மதின் கையில் எனது அனைத்து பாவங்கள் மற்றும் என்னிடம் உள்ள தீய பழக்கங்களில் இருந்தும் தவ்பா செய்கின்றேன். மேலும் எனது சக்தி மற்றும் அறிவு உள்ளளவும் எனது வாழ்வின் இறுதி நாள் வரை அனைத்து பாவங்களிலிருந்தும் விலகி இருப்பேன். மேலும் பௌதீக நிம்மதி மற்றும் மன இச்சைகளை விட மார்க்கத்துக்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்று உண்மையான உள்ளத்துடனும் உறுதியான எண்ணத்துடனும் நான் உறுதி கூறுகிறேன். மேலும் ஜனவரி 12 -ஆம் தேதி அன்றைய பத்து நிபந்தனைகளை இயன்ற அளவு ஏற்று நடப்பேன். மேலும் இப்போதும் எனது முந்தைய பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்பை நாடுகிறேன். அஸ்தக்.்.பிருல்லாஹ ரப்பி மின் குல்லி தம்பின்(வ்) வஅதூபு இலைஹி. நான் என் பாவங்களுக்காக என் இறைவனாகிய அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்கிறேன். .மேலும் நான் அவன் பக்கமே திரும்புகிறேன்....... ரப்பி இன்னீ ஸலம்து ந.்.ப்ஸி வ.்.தர.்.ப்து பிதன்பி .்.பக்.்.பிர்லீ துனூபி .்.ப இன்னஹூ லா யக்.்.பிருத் துனூப இல்லா அன்த. என் இறைவா! நான் என் ஆன்மாவிற்கு அநீதி இழைத்து விட்டேன். மேலும் நான் என் பாவங்களை ஒப்புக் கொள்கிறேன். எனவே நீ என் பாவங்களுக்காக என்னை மன்னிப்பாயாக. ஏனென்றால் உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவரும் இல்லை...........

## பைஅத்தின் நோக்கங்கள்

பைஅத்தின் நோக்கங்களை பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த பைஅத்தின் நோக்கமாவது முத்தகீன், அதாவது இறையச்சம் கொண்டவர்களின் ஜமாஅத்தை ஒன்று திரட்டுவதற்காகவே ஆகும். இவ்வாறாக இறையச்சம் கொண்டவர்களின் ஒரு பெரும் எண்ணிக்கை உலகில் தனது தூய தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் அவர்களது ஒற்றுமை இஸ்லாத்திற்கு அருள், கண்ணியம் மற்றும் நல்ல விளைவு ஏற்படுவதற்கு காரணமாக அமைய வேண்டும் என்பதற்காகவுமே ஆகும். மேலும் ஒரு வார்த்தைக்கு ஒன்றுபட்டதன் அருளால், இஸ்லாத்தின் தூய மற்றும் பரிசுத்தமான தொண்டுகளில் விரைவில் பலன் கிடைக்கும். மேலும் அறிவற்ற, கருமித்தனம் கொண்டவனை போல் இருக்கக் கூடாது. தனது கருத்து வேறுபாடு மற்றும் ஒற்றுமையின்மையின் காரணத்தினால் இஸ்லாத்திற்கு கடும் இழப்பை ஏற்படுத்திய மற்றும் அதன் அழகிய முகத்தை தனது கட்டுப்படாமையின் காரணத்தினால் கறை படியச் செய்த அந்த தகுதியற்ற மக்களைப் போல் இருக்கக் கூடாது. மேலும் (மார்க்கத்தின்) அவசியத்தைக் குறித்து எவ்வித கவலையும் அற்ற, தங்களது சகோதரர்களின் நேசத்தில் எவ்வித ஈடுபாடும் காட்டாத மேலும் மக்களது நன்மைக்காக எவ்வித உணர்வும் இல்லாத அலட்சியம் கொண்ட பெரியோர்களைப் போன்றும் இருக்கக் கூடாது. மாறாக அவர்கள் எப்படிப்பட்ட சமுதாயத்தின் மனிதநேயமிக்கவர்களாக இருக்க வேண்டும் என்றால், ஏழைகளுக்கு அடைக்கலம் கொடுப்பவர்களாக, தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு அனாதைகளுக்கு தந்தையை போன்றவர்களாக ஆகி விட வேண்டும். மேலும் (மார்க்கப்) பணிகளைச் செய்வதற்காக அதீத அன்பு கொண்டவரைப் போன்று மாய்த்துக் கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். மேலும் அவர்களது பொதுவான அருள்கள் உலகில் பரவுவதற்கு எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்பவர் -களாகவும், இறை நேசம் மற்றும் இறை அடியார்களது



1889 -ஆம் ஆண்டு முதல் பைஅத் நடைபெற்ற லூதியானாவிலுள்ள ஹஸ்ரத் சூ.்.பி அஹ்மது ஜான் அவர்களின் இல்லம்

நேசத்தின் தூய ஊற்று அனைவரது உள்ளங்களில் இருந்தும் பெருக்கெடுத்து ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து ஓர் ஆற்றைப்போல் பாய்ந்தோடியவாறு தென்பட வேண்டும்.

## ஒரு மாபெரும் முன்னறிவிப்பு

அதற்குப் பிறகு இதே பிரசுரத்தில் ஒரு மாபெரும் முன்னறிவிப்பைப் பற்றி எடுத்துரைத்தார்கள் .அது யாதெனில், இந்தக் கூட்டம் ஒரு தூய கூட்டமாக இருக்கும். மேலும் அவன் சுயமே தனது ஆன்மாவால் ஆற்றலை வழங்குவான்.. அவர்களை தூய்மையற்ற வாழ்க்கையிலிருந்து தூய்மைப்படுத்துவான். மேலும் அவர்களது வாழ்வில் ஒரு தூய மாறுதலை வழங்குவான். அவன் தனது தூய முன்னறிவிப்பில் வாக்குறுதி அளித்ததைப் போன்று அக்கூட்டத்தை பெருகச் செய்வான். மேலும் ஆயிரக் -கணக்கான உண்மையாளர்களை அதில் இணைப்பான்.

(தொடர்ச்சி 22 -ஆம் பக்கம்...)

# இறை மன்னிப்பின் காட்சிகள் 4

## - - - ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) - - -

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

[இறுதி தீர்ப்பு நாளின் போது இறை மன்னிப்பின் தோற்றம் வெளிப்பட்ட குறிப்பிட்ட ஒரு நாளில் மக்களின் செயல்களின் கணக்குகள் பரீசீலிக்கப்படும் பரந்த மைதானத்தில் கு∴ப்ரான் என்னும் மலக்கு என்னை அழைத்துச் செல்கிறார். அங்கு இறை மன்னிப்பின் பல்வேறு காட்சிகளை நங்கள் பார்த்துக் கொண்டே சென்று கொண்டிருக்கிறோம்]

18) நானும், கு∴ப்ரானும் மேலும் முன்னேறிச் சென்றோம். அங்கு பெண்களுக்கு சிறப்பான பரிவு காட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டோம். அது ஒரு பொதுவான கட்டளையின் அடிப்படையில் இருந்தது. அந்த கட்டளை என்னவென்றால், ஒரு பெண் ஐவேளை தொழுது, நோன்பு நோற்று, தனது கற்பைக் காத்துக் கொண்டு, தனது கணவருக்கு கீழ்ப்படிந்தவளாய் இருந்தால், அவள் எந்த வாசலின் மூலமாகவும் சுவர்க்கத்தினுள் நுழைந்து கொள்ளலாம்.




19) பின்னர் நாங்கள் சென்றோம். அங்கு நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மரணித்த ஒருவர் அழைக்கப்பட்டார். அவர் மரணித்த போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் ஜனாஸா தொழுவதற்காக சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த மனிதன் அதிகமாக பாவம் செய்தவன் மற்றும் வரம்பு மீறியவன். எனவே அவனது ஜனாஸாவுக்கு தாங்கள் தொழ வைக்க வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ள வந்திருந்தவர்களிடம் கேட்டார்கள். "உங்களில் எவரேனும் இந்த மனிதர் இஸ்லாத்தின் ஏதாவதொரு கட்டளையின்படி செயலாற்ற பார்த்தீர்களா? மக்கள் அவர் ஓர் இரவில் பாதுகாப்புப் பணியில் நின்று கொண்டிருந்தார்" என்று கூறினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்காக தொழுகை நடத்தினார்கள். பின்னர் அவரது கபரில் கைப்பிடி மண் போட்டார்கள். பிறகு அந்த கபரைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்: "மரணித்தவரே! உமது நண்பர்கள் உம்மை நகரத்திற்குரியவராகக் கருதுகின்றனர். ஆனால் நான் சாட்சி கூறுகிறேன். நீர் சுவர்க்கம் செல்வீர்." பின்னர் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, "உமரே! மக்களின் செயல்களை மிகவும் ஆழமாகத் தோண்டிப் பார்க்காதீர். பொதுவாக அவர்கள் இஸ்லாத்தை கடைபிடிக்கின்றனரா இல்லையா என்று மட்டும் பார்ப்பீராக" என்று கூறினார்கள்.

20) அதே போன்று அங்கு இறைவழியில் போரிட்ட ஒரு முஸ்லிம் வீரர் இருந்தார். அவரது செயல்கள் அவரை சுவர்க்கத்திற்கு அனுப்புவதற்கு போதுமானதாக இல்லை. அவரது நற்செயல்களின் எடை அவரது தீய செயல்களை விட கூடும் வரை அல்லாஹ் அவரது தராசில் அவரது குதிரையையும், குதிரைக்கு கொடுக்கப்படும் உணவையும் அதன் சாணத்தையும் போட்டான். அப்போது அவரது நற்செயல்களின் எடை கூடி விட்டது. அந்த வீரர் குதிரை மீது சவாரி செய்தவாறே சுவர்க்கம் நோக்கி விரைந்தார்.

அதைப் போன்று ஏராளமான மக்கள் மன்னிக்கப்பட்டனர். காரணம் அவர்கள் நபிமார்கள் மீதும், இறை நேசர்கள் மீதும், பிற நல்லடியார்கள் மீதும் அன்பு வைத்திருந்தனர். அவர்களது செயல்கள் போதுமானதாக இல்லாத போதிலும், 'ஒருவர் தான் நேசிக்கின்றவருடன் இருப்பார்' என்ற ஹதீஸின் அடிப்படையில் அவர்களால் அன்பு செலுத்தப்பட்டவர்களின் அருகில் கொண்டு செல்லப்பட்டனர்.

21) மற்றோரிடத்தில் நான் பார்த்தேன். மக்கள் கூட்டம் இறைவனை நினைவு கூறியவாறும் அவனது தூய்மையை எடுத்துக் கூறியவாறும் இருந்தது. மலக்குகள் அவர்களை தமது இறக்கைகளின் கீழ் சுமந்தவாறு சுவர்க்கத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அவர்களின் பின்னால் ஒரு மனிதன் நடந்து சென்று கொண்டிருந்தார். கு.்.ப்ரான் என்னிடம் கூறினார். அந்த மனிதனின் கதை மிகவும் சுவாரஸ்யமானது. ஒருமுறை அல்லாஹ் மலக்குகளிடம், "இன்று நீங்கள் உலகில் பார்த்தது என்ன?" என்று கேட்டான். மலக்குகள் கூறினர். "மக்களின் ஒரு கூட்டம் பள்ளிவாசலில் அமர்ந்து உன்னை அன்புடனும் பற்றுடனும் நினைவு கூறிக் கொண்டிருந்தனர்." அல்லாஹ் கூறினான். "நீங்கள் சாட்சியாய் இருங்கள். நான் அவர்கள் அனைவரையும் மன்னித்து விட்டேன்." மலக்குகள் கூறினர். "அல்லாஹ்வே! அந்த கூட்டத்தில் ஒரு மனிதர் இருந்தார். அவர் உன்னை நினைவு கூர்வதற்காக அங்கு வரவில்லை. ஆனால் அவர் அவரது ஒரு தனிப்பட்ட வேலையின் நிமித்தம் அங்கு வந்தார்." அல்லாஹ் கூறினான். "சாட்சியாய் இருங்கள். நான் அவரையும் மன்னித்து விட்டேன். ஏனெனில் இறைவனை நினைவு கூர்பவர்களின் சிறப்பு எத்தகையதென்றால் அவரது தோழமையில் இருப்பவர்களும் கூட துர்பாக்கியம் பெற்றவராக மாட்டார்." கு.்.ப்ரான் கூறினார். "அதோ பின்னால் நடந்து செல்கிறாரே அவர் தான் அந்த மனிதர்" என்று கூறினார்.

22) நாங்கள் மேலும் சற்று சென்ற போது ஒரு மனிதன் அல்லாஹ்வின் மன்னிப்பின் போர்வையைத் தன் மீது போர்த்திக் கொண்டவாறு நடந்து சென்று கொண்டிருந்ததை கு.்.ப்ரான் எனக்கு காண்பித்தார். அவரது விஷயமும் சுவாரஸ்யமானது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற பிறகு, இந்த மனிதர் மற்றொரு சஹாபியுடன் சேர்ந்து மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்தார். அவர் மதீனாவிற்கு சென்று பின்பு அங்கு நோயுற்றார். அவர் அதில் எந்த அளவு பொறுமையை இழந்து விட்டார் என்றால் அவர் தனது கையின் மணிக்கட்டுகளை ஓர் அம்பினால் அவரே கிழித்துக் கொண்டார். அதனால் பெரிதும் இரத்தப்போக்கு ஏற்பட்டு பின்னர் மரணித்து விட்டார். அவரது நண்பரான அந்த சஹாபி கனவில் இவரைக் கண்டார். அவர் நல்ல நிலையில் இருந்தார். ஆனால் அவரது இரு கைகளும் மூடப்பட்டிருந்தன. நண்பர் அவரிடம் உனக்கு மரணித்த பின் என்ன நேர்ந்தது? என்று கேட்டார். அவர் கூறினார். "நான் உம்முடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கி ஹிஜ்ரத் செய்ததால் அல்லாஹ் என்னை மன்னித்து விட்டான். ஆனால் நானே சேதப்படுத்திக் கொண்ட எனது கைகளை குணப்படுத்த மாட்டேன் என்று அல்லாஹ் கூறி விட்டான். அதனால்தான் எனது கைகள் மூடப்பட்டுள்ளன" என்று கூறினார். இந்த கனவை அந்த நண்பர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அதாவது, "அல்லாஹ்வே! அவரது கைகளையும் மன்னித்து




விடுவாயாக." கு.்.ப்ரான் கூறினார். நேற்று வரை இவர் சேதப்பட்ட கைகளுடனேதான் இருந்தார். இன்று மன்னிப்பின் நாளில் நபி (ஸல்) அவர்களின் துஆவின் காரணத்தால் அவரது கைகள் குணப்படுத்தப்பட்டு இதோ சுவர்க்கம் சென்று கொண்டிருக்கிறார்.

23) நாங்கள் மேலும் சென்றோம். அப்போது ஒரு மனிதனை அல்லாஹ் நானே தனிப்பட்ட முறையில் விசாரிப்பேன் என்று கூறியதும் அவன் கொண்டு வரப்பட்டான். அல்லாஹ் அவனிடம், "நீ உலகில் இன்ன இன்ன தீய பாவங்களையெல்லாம் செய்தாய் என்பது உனக்கு தெரியுமா?" என்று கேட்டான். அதற்கு அவன் ஆம்! எனக்கு தெரியும் என்றான். பயத்தின் காரணமாக அவனது உடலின் ஒவ்வொரு தசையும் நடுநடுங்கிக் கொண்டிருந்தது. அவனுக்கு இப்போது நரகத்தை தவிர வேறு எங்கும் இடமிருக்காது என்பது உறுதியாய் அவனுக்கு தெரிந்தது. ஆனால் அதே நொடியில் அல்லாஹ் கூறினான். "நான் உனது பாவங்களை உலகில் மறைத்துக் கொண்டேன். எனவே இன்றும் உனது பாவங்களை நான் மறைத்துக் கொள்வேன். நீ உனது

*(தொடர்ச்சி 15 -ஆம் பக்கம்...)*

# 'இஸ்முஹு அஹ்மது' என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

4


தமிழாக்கம்: முரப்பி மஹ்மூது அஹ்மது அப்துல்லாஹ், காதியான்

**நான்காவது ஆதாரம்:** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் அஹ்மது என்பதற்கு நான்காவது ஆதாரம் என்னவென்றால், அன்னார் தனது அனைத்து நூற்களின் இறுதியில் தனது பெயர் அஹ்மது என்று மட்டுமே எழுதியுள்ளார்கள். இது அவர்களின் பெயர் அஹ்மது ஆகும் என்பதற்கு உறுதியான ஆதாரம் ஆகும். அவர்களின் பெயர் அஹ்மது இல்லை என்று சொன்னால் பிறகு ஏன் அஹ்மது என்று மட்டுமே எழுத வேண்டும்!? அவர்களின் பெயர் குலாம் அஹ்மது என்றிருந்தால் பிறகு அவர்களின் அசல் பெயர் குலாமாக இருந்திருக்க வேண்டுமே அல்லாமல் அஹ்மது இல்லை. ஆகவே அன்னார் எப்போதாவது தனது பெயரை சுருக்கி எழுதுவதாக இருந்திருந்தால் குலாம் என்று எழுதியிருக்க முடியும். அல்லாமல் அஹ்மது என்று எழுதி இருக்கக் கூடாது. ஆனால் அவர்கள் அஹ்மது என்பதையே தனது பெயராக எழுதி வந்தார்கள் அல்லாமல் குலாம் என்று எழுதி வரவில்லை. இதிலிருந்து அவர்களின் பெயர் அஹ்மது என்றே இருந்தது என்பது தெரிய வருகிறது.

**ஐந்தாவது ஆதாரம்:** ஐந்தாவது ஆதாரம் என்னவென்றால், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலை அவர்களை அஹ்மது என்று எழுதி வருகிறோம் என்று ஆட்சேபனை செய்யும் கைர் முபாயியீனாகிய இவர்களே தமது நூட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அஹ்மது காதியானி என்று எழுதி வந்துள்ளனர். உதாரணத்திற்கு மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் வாழ்க்கையை குறித்து ஒரு கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். அக்கட்டுரைக்கு பெயரே அஹ்மது என்று வைத்துள்ளார். அன்னாரின் பெயர் அஹ்மது இல்லை என்று சொன்னால் பிறகு அன்னாரை குறித்து எழுதிய கட்டுரைக்கு அஹ்மது என்ற பெயரில் தலைப்பு ஏன் வைக்கப்பட்டது? இவ்வாறே காஜா (காஜா கமாலுத்தீன்) சாஹிப் தனது எழுத்துக்களில் ஹஸ்ரத் சாஹிபை அஹ்மது என்றே எழுதியுள்ளார்.

ஆக, இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலை அவர்கள் வாழ்ந்த காலத்தில் அன்னாரை அஹ்மது என்று அழைத்து வந்துள்ளனர் ஆனால் இன்று அன்னார் அஹ்மது இல்லை என்று ஏமாற்றுகின்றனர்.

**ஆறாவது ஆதாரம்:** ஹஸ்ரத் சாஹிபின் இல்ஹாமில் பலமுறை அஹ்மது என்றே வந்துள்ளது. ஆம், ஓரிரு இடங்களில் குலாம் அஹ்மது என்றும் வந்துள்ளது. இவ்விடத்தில் பண்பின் அடிப்படையிலே வந்துள்ளது என்று கூறலாம். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்



அஹ்மதிய்யத் என்ற பண்பின் முழுத்தோற்றமாக இருக்கின்ற போது வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் அலை அவர்களும் குலாமே அஹ்மதாக (அஹ்மதின் அடியானாக) நிச்சயமாக இருந்தார்கள். ஆகவே இவ்வாறான ஒரு சில இடங்களில், பெயராக வராமல் பண்பாக வந்துள்ளது என்று பொருள் கொள்ளலாம். ஆனால் பெரும்பான்மையாக அஹ்மது என்று அழைப்பதின் மூலம் இறைவனின் பார்வையிலும் அன்னாரின் பெயர் அஹ்மதாகவே இருந்தது என்பது நிரூபமானமாகிறது. இல்லை என்று சொன்னால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மதாக இருந்தது; ஆனால் இறைவனோ ஒருமுறை கூட அன்னாரை இப்பெயரைக் கொண்டு அழைக்கவில்லை என்பதும் வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை)

அவர்களின் பெயர் அஹ்மது ஆக இருக்கவில்லை; மாறாக குலாம் அஹ்மதாக இருந்தது. ஆனால் அஹ்மது என்ற பெயரால் அன்னார் மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார் என்பதும் ஆச்சரியத்திற்குரியதாகும். மிக அரிதாகவே குலாம் அஹ்மது என்ற பெயரை கொண்டு அழைக்கப்பட்டுள்ளார். (அதுவும் நான் அறிந்தவரை வஹியில், குலாம் அஹ்மது என்று அன்னாரை எப்போதும் அழைக்கவில்லை. ஆம், 'குலாமே அஹ்மது கி ஜெய்' என்பன போன்ற வஹியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது). இதனால் நவூதுபில்லாஹ் அல்லாஹ் எப்போதும் அசல் பெயரை தவிர்த்து மற்ற பெயரில் அல்லது முன்னறிவிப்பில் இல்லாத பெயரை கொண்டு அழைத்துள்ளான் என்பது நிரூபணமாகாது. மாறாக மக்களின் கவனம் இதன் பக்கம் திரும்ப வேண்டும் என்பதற்காக எது முன்னறிவிப்பில் இருக்கிறதோ அந்த பெயரைக் கொண்டே அழைக்கப்பட்டுள்ளார்கள்.



**ஏழாவது ஆதாரம்:** பிறகு அன்னாரின் பெயர் அஹ்மது என்பதற்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒரு சாட்சியும் இருக்கின்றது. அவர்கள் 'மபாதிவுஸ் ஸர்ஃப் வன்னஹு' என்ற தனது இதழில் எழுதுகின்றார்கள், அதாவது, 'முஹம்மது என்பது நமது காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களின் பிரத்தியேக பெயர் ஆகும். மக்கா பிரத்தியேக ஒரு நகரத்தின் பெயர் ஆகும். இங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். அஹ்மது என்பது காதியானில் தோன்றிய நமது இமாமின் பெயர் ஆகும்'. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தூய்மையானவர், இறையச்சமுடையவர் என்பதை கைர் முபாயியீனும் (பைஅத்தில் இணையாதவர்கள் அதாவது லாஹுரி பார்ட்டி) ஏற்றுள்ளனர். பிறகு எவ்வாறு அவர்கள் நவூதுபில்லாஹ் பொய்யுரைத்துள்ளார் என்று கூற முடியும்!? அல்லது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் சாஹிபின் அசல் பெயரே தெரியாது என்று ஏற்க வேண்டியது வரும்.

**எட்டாவது ஆதாரம்:** எட்டாவது ஆதாரம் கைர் முபாயியீன் மட்டுமல்லாமல் அவர்களின் அஞ்சுமனின் ஒன்றுபட்ட ஒரு கருத்தே ஆகும். இவர்களின் சத்ர் அஞ்சுமன் வழங்கிய இந்த சாட்சியை தவிர்த்து கைர் முபாயியீனுக்கு வேறெந்த சாட்சி நம்பத் தகுந்ததாக இருக்க முடியும்!? அந்த சாட்சி இதுவாகும் அதாவது, 'வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் அல்-வஸிய்யத்' எனும் நூலின் பக்கம் 8 -இல் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

"ஜமாஅத்தின் உள்ளளவில் தூயோராக திகழும் கண்ணியத்திற்குரியவர்கள் எனக்கு பிறகு எனது பெயரிலே மக்களிடம் பைஅத் வாங்க வேண்டும்." (அல்-வஸிய்யத் பக்கம் 8. ருஹானி கஸாயின் பாகம் 20 பக்கம் 306)

இக்கட்டளைக்கேற்ப அஞ்சுமன் இஷாஅத் இஸ்லாம் லாஹுர் சார்பாக பைஅத்தின் எந்த சொற்கள் வெளியிடப் -பட்டனவோ அந்த வரிகள் இதுவாகும்:

"இன்று நான் முஹம்மது அலியின் கையில் அஹ்மதின் பைஅத்தில் இணைந்து எனது அனைத்து பாவங்களிலிருந்தும் தவ்பா செய்கின்றேன்".

எனது பெயரில் பைஅத் வாங்குங்கள் என்ற அல்-வஸிய்யத்தில் வரும் இக்கட்டளைக்கு அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் விளக்கம் அளித்துள்ளது, அஹ்மது எனும் பெயரில் மக்களிடம் இருந்து பைஅத் வாங்கத் துவங்கியுள்ளனர் என்பதை இவ்வரியை படிக்கும் ஒவ்வொரு -வரும் அறிந்து கொள்ள முடியும்.

இப்போது கேள்வி என்ன -வென்றால், வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் அஹ்மது இல்லை என்பதை எனது பெயரில் பைஅத் வாங்குங்கள் என்ற கட்டளை எவ்வாறு நிறைவேறியது!? மேலும் பைஅத்தின் இவ்வரியின் அடிப்படையில் அன்னாரின் பெயர் அஹ்மது என்பதாக இருந்தால் பிறகு அன்னாரின் பெயர் அஹ்மது ஆக இருக்க -வில்லை என்று ஏன் விவாதிக்க வேண்டும்? பிறகு ஏன் "இவர்களே குலாம் அஹ்மதை அஹ்மதாக மாற்றி அமைத் -துள்ளனர்?" என்று எம்மீது குற்றம் சாட்டப்படுகிறது? எவர் ஒருவர் காழ்ப்புணர்ச்சியை தவிர்த்து இவ் விஷயத்தில் சிந்திக்கிறாரோ அவர் "எமது எதிரிகளின் உள்ளமும் வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹின் பெயர் அஹ்மது என்பதற்கு சாட்சி பகர்கின்றது என்றும், எம்மீது வைக்கப்படும் இவர்களின் ஆட்சேபனை, இவர்களின் சொல் ஒன்றும், செயல் வேறொன்றாகும்" என்பதையும் புரிந்து கொள்வார்.

**ஒன்பதாவது ஆதாரம்:** வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் அஹ்மது ஆகும் என்பதற்கான ஒன்பதாவது ஆதாரம் என்னவென்றால், அவர்களே இவ்வசனத்திற்கு ஒப்பானவராக தன்னை கூறியுள்ளார்கள். அன்னார் இஸாலே அவ்ஹாம் பாகம் 2 பக்கம் 363 -இல் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

மேலும் அவன் வரக்கூடியவரின் பெயரை அஹ்மது என்று வைத்துள்ளான். இதுவும் அவரின் ஒப்புமையை குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனென்றால், முஹம்மது என்பது ஜலாலி ஆகும். அஹ்மது என்பது ஜமாலி ஆகும். மேலும் அஹ்மது மற்றும் ஈஸா ஆகிய இரண்டு பெயர்களும் தமது ஜமாலி அர்த்தத்தின் அடிப்படையில் ஒன்றாகும். இதனை குறித்தே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

وَمُبَشِّرًا بِرَسُوْلٍ يَّاْتِيْ مِنْ بَعْدِي اسْمُهٗ اَحْمَدُ ஆனால் நமது நபி (ஸல்) அவர்களோ அஹ்மது மட்டும் இல்லை மாறாக முஹம்மதும் ஆவார்கள். அதாவது இது ஜலால் மற்றும் ஜமால் இரண்டையும் ஒன்றிணைக்கக் கூடியதாகும். ஆனால் இறுதி காலத்தில் இந்த முன்னறிவிப்பின் அடிப்படையில் ஈஸாவின் உண்மைத்துவத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் தனித்துவம் படைத்த அஹ்மது அனுப்பப்பட்டுள்ளார்.

(ரூஹானி கஸாயின் பாகம் 3 பக்கம் 463)

இவ்வாசகத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அவர்கள் தன்னை இவ்வசனத்திற்கு உரியவராக ஆக்கியுள்ளார்கள். ஏனென்றால் இங்கு இதற்கு பொருத்தமானவர் மாநபி (ஸல்) அவர்கள் என்றால் பிறகு, முஹம்மது மற்றும் அஹ்மது குறித்து இங்கு முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கும் என அன்னார் ஆதாரத்துடன் நிரூபித்து விட்டார்கள். ஆனால் இங்கு அஹ்மதை குறித்து முன்னறிவிப்புள்ளது. இதிலிருந்து இவர் வேறொருவர் ஆவார், அவர் தனித்துவம் படைத்த அஹ்மதாக திகழ்வார் என்பது தெரிகிறது. ஆகவே இவ்வாதாரமானது அவர்கள் அஹ்மது ஆவார்கள் என்பதை தெளிவாக நிரூபிக்கிறது. மட்டுமல்லாமல், இந்த முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் அவர்களே ஆவார்கள் என்பதை நிரூபிக்கிறது. பிரிதோரிடத்தில் அவர்கள் இவ்வசனத்திற்கு ஒப்பானவராக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள் என்று சொன்னால் அதன் பொருள், வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு கிடைத்த அனைத்து அருட்களும் நபி (ஸல்) அவர்களிடமிருந்தே கிடைத்தன. ஆகவே எச்செய்தி அவர்களைக் குறித்து தரப்பட்டுள்ளதோ அதற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் நிச்சயம் ஆவார்கள். ஏனென்றால், எந்த சிறப்புகள் நிழலில் இருக்கின்றனவோ அது அசலில் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஆகவே பிம்பத்தைக் குறித்து கருத்தைக் கூறக் கூடியவர் அசலைக் குறித்தும் கருத்தைப் பதிவு செய்வார்.

ஆக, இந்த ஆயத்தில் சைகையாக ரஸூலே கரீம் (ஸல்) அவர்களைப் பற்றியும் செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் இக்கூற்றினால், இந்த முன்னறிவிப்புக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொருந்தமாட்டார்கள் என்பது நிரூபணமாகாது. இதற்கு வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களே உண்மையில் ஒப்பானவர் ஆவார். அன்னாரின் அனைத்துச் சிறப்புகளும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளதனால் இவ்வடிப்படையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை குறித்த முன்னறிவிப்பும் இதிலிருந்து வெளிப்படும்.

**பத்தாவது ஆதாரம்:** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அஹ்மது ஆவார்கள் என்பதற்கான பத்தாவது ஆதாரம் என்னவென்றால், இஞ்சீலில்



அஹ்மது என்ற வார்த்தை எங்கும் இல்லை. ஆகவே ஒன்று, இஞ்சீலிலிருந்து இந்த வார்த்தை அதனை திரித்து எழுதும் காலத்தில் அழிந்திருக்க வேண்டும். இரண்டாவது ஒரு நிலை இருக்கிறது என்று சொன்னால், அஹ்மது என்ற இந்த அரபிச் சொல்லானது ஈஸா (அலை) அவர்களின் ஏதேனும் ஒரு முன்னறிவிப்பின் பொருளாக இருக்க வேண்டும். மேலும் நமக்கு திருக்குர்ஆனிலிருந்து அறிய வருவது என்னவென்றால், பலதரப்பட்ட மொழிகளில் தரப்பட்டுள்ள (முன்னறிவிப்பு) செய்திகளை திருக்குர்ஆன் அரபி மொழியில் கூறியுள்ளது. ஆகவே இந்த உண்மையை மனதில் வைத்தவாறு நாம் இஞ்சீலை பார்த்தோம் என்றால், இதில் இரண்டு தூதர்களைக் குறித்த முன்னறிவிப்பை காண்கிறோம். ஒன்று 'அந்த தூதர்' என்ற செய்தி, மற்றொன்று 'மஸீஹின் இரண்டாவது வருகை' குறித்த செய்தி.

அரபி மொழியை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது 'அந்த தூதர்' என்பதற்கு அரபி மொழியில் அஹ்மது என்று வருவதில்லை. எவ்வாக்கியத்திற்கும் கூட இது சம்பந்தம் இல்லை. ஆனால் மறுபடியும் வருவதை குறித்து அரபி மொழியில் உள்ள ஒரு பழமொழியை நம்மால் அறிய முடிகிறது. அது اَلْعَوْدُ اَحْمَدُ என்ற வாக்கியம் ஆகும். இதற்கு பொருள் என்னவென்றால், 'மறுபடியும் திரும்புவது அஹ்மது ஆகும்'. மேலும் இதற்கு காரணம் இதுவாகும். அதாவது மனிதன் எப்போது ஒரு காரியத்தை செய்வதற்கு மீண்டும் திரும்புகிறானோ அதனை முன்பை விட நன்கு செய்கிறான். திருக்குர்ஆனிலும் அல்லாஹ் இக்கருத்தைக் குறித்து இவ்வாறு சுட்டிக் காட்டுகிறான்,

مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ مِّنْهَآ اَوْ مِثْلِهَا அதாவது நாம் ஏதாவதொரு போதனையை நீக்கி விட்டால் அல்லது மறக்கடித்து விட்டால் பிறகு அதனை விட சிறந்ததை கொண்டு வருகிறோம் அல்லது அதனை போன்றதொன்றாவது கொண்டு வருவோம். (திருக்குர்ஆன் 2:107)

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளதாவது ஒரு போதனை அழிக்கபட்டு நாம் மற்றொன்றை கொண்டு வந்தால் அதில் ஒரு நுட்பம் இருக்கிறது. மேலும் அதனை விட சிறப்பான போதனையை கொண்டு வருவது அவசியமாகும். அல்லது குறைந்தபட்சம் அதற்கு நிகரானதாக இருக்க வேண்டும்.

ஆகவே, மீண்டும் ஒரு பணியை செய்யும்போது அதிகப்படியான சிறப்பு கவனத்தில் கொள்ளப்படுகிறது. இந்த

விஷயத்தை கருத்தில் கொண்டுதான் அரபி மொழியிலும் اَلْعَوْدُ اَحْمَدُ என்ற பழமொழி அமைந்துள்ளது. ஆகவே மீண்டும் திரும்புவதற்கு அஹ்மது என்று கூறுகிறோம் என்றால், நான் மீண்டும் இவ்வுலகதிற்கு வருவேன் என்ற ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இக்கூற்றானதை அரபி மொழியில் உவமையாக இவ்வாறும் கூறப்படும் அதாவது அவர்கள் ஒரு தூதரைக் குறித்து முன்னறிவித்தார்கள். அவர் மீண்டும் உலகத்திற்கு வந்திருப்பார் என்பது அவரின் குணமாக இருக்கும். மேலும் மஸீஹ் (அலை) அவர்களின் இரண்டாவது வருகையைக் குறித்து முன்னறிவிப்பு செய்துள்ள ஹதீஸுகளுக்கு ஏற்ப இப்பொருள் அமைந்துள்ளது. இந்த உவமையை பயன்படுத்தியிருப்பதில் உள்ள நுட்பம் என்னவென்றால், ஒன்று ஹதீஸ்களிலுள்ள இம்முன்னறிவிப்பை இது ஓர் உவமையே தவிர நேரடியான பொருள் அல்ல என்று தீர்மானிக்கப்பட்டு விட்டது. இரண்டாவது, ஒரே சொல்லில் மஸீஹின் இந்த இரண்டாம் வருகையானது அவரின் முதல் வருகையை விட சிறப்பானதாக இருக்கும் என்று கூறப்பட்டு விட்டது. இவ்வாறு மிர்ஸா சாஹிப் மஸீஹ் (அலை) அவர்களை விட எவ்வாறு சிறப்பானவராக இருக்க முடியும்? என்ற இவர்களின் ஆட்சேபனை அகற்றப்பட்டு விட்டது. இறைவனே இவர்களுக்கு பதில் அளித்துள்ளான். அதாவது அதே பெயரில் நாம் மற்றொருவரை அனுப்பி அவரை அஹ்மதாகவும் ஆக்கியுள்ளோம். அதாவது முன்பு வந்து சென்ற மஸீஹை விட சிறப்பித்துள்ளோம்.

ஆகவே இந்த பத்து ஆதாரங்களின் வாயிலாக வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களே அஹ்மது ஆவார்கள் மேலும் அன்னாரை குறித்தே இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது.

(தொடரும்)

---

*(11 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நற்செயல்களின் பதிவேட்டை மட்டும் எடுத்துக் கொண்டு கணக்கு சரிபார்க்கப்படும் இடத்தில் சென்று நில். உனது பாவங்களின் பதிவேட்டை இங்கேயே விட்டுச் செல். பிறவற்றை நாம் பார்த்துக் கொள்வோம்” என்று கூறினான்.


24) அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒரு கைதி அவனது செயல்களின் 99 பதிவேடுகளுடன் கொண்டு வரப்பட்டான். அவனிடம் கேட்கப்பட்டது. இவையெல்லாம் உனது செயல்களின் பதிவேடுகள். இவற்றுள் எதையாவது மறுக்கின்றாயா? அவன் கூறினான். இறைவா! அதில் எழுதப்பட்டவையெல்லாம் சரியானவையே. பிறகு நீ தப்பிப்பதற்காக வழி ஏதும் என்னிடம் இருப்பதாக சொல்ல விரும்புகிறாயா? என்று கேட்கப்பட்டது. அவன், இல்லை என் இறைவா! என்றான். அப்போது அல்லாஹ் “நாம் உமக்கு ஒரு வழி இருப்பதைப் பார்க்கின்றோம். அது மிகப் பெரிய நன்மையாகும். நீர் தண்டிக்கப்பட மாட்டீர்” என்று கூறினான். பின்னர் ஒரு காகிதத் துண்டு கொண்டு வரப்பட்டது. அதில் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என்று எழுதப்பட்டிந்தது. இந்தக் காகிதத் துண்டை அவனது நற்செயல்களின் எடையுடன் சேர்க்குமாறு கூறப்பட்டது. அப்போது அவனது நற்செயல்களின் தட்டின் எடை மறு தட்டிலிருந்த பாவங்களின் கனத்த பதிவேடுகளின் எடையை விட அதிகமாகி கிழே சென்றது. அவர் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து அல்ஹம்துலில்லாஹ் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறியவாறே சுவர்க்கத்தினுள் சென்றார்.

25) நாங்கள் எங்கள் கவனத்தை இன்னொரு பக்கம் திருப்பிய போது அல்லாஹ்வின் சார்பாக ஓர் அறிவிப்பாளர் இவ்வாறு அறிவித்துக் கொண்டிருந்தார். தங்களது உடல்களை இரவு நேரங்களில் இறைவனை நினைவு கூர்வதற்காக தமது படுக்கையை விட்டும் விலக்கியவர்கள் எங்கே? என அவர் சப்தமிட்டு அழைத்தார். இதைக் கேட்டதும் பலர் எழுந்து நின்றனர். அவர்கள் அனைவரும் எந்த நியாயத் தீர்ப்புமின்றி மன்னிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

26) பிறகு அல்லாஹ்வின் அந்த சிறப்பு நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு மனிதன் கொண்டு வரப்பட்டான். ஒரு கட்டளை அல்லாஹ்விடமிருந்து பிறப்பிக்கப்பட்டது. அதில் அந்த மனிதனின் சிறிய பாவங்களையும் தவறுகளையும் முதலில் படிக்க வேண்டுமென்றும் அவனது பெரும் பாவங்களை முதலில் படிக்கக் கூடாது என்றும் கட்டளை இடப்பட்டது. அந்த சிறிய பாவங்களைக் கேட்டதும் அவன் கூறினான். “ஆம் இறைவா! நான் இவை எல்லாவற்றையும் செய்தேன். நான் எப்படி இதனை மறுக்க முடியும்” என்றான். அதே சமயம் அவன் இவை எல்லாம் நமது சிறய பாவங்கள் தாம். தம்முடைய பெரிய பாவங்களும் வாசிக்கப்பட்டால் என்ன செய்வது? என்று அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருந்தான். அதே நேரத்தில் அல்லாஹ் கூறினான். “நீ செல்வாயாக! நாம் உம்மை மன்னித்து விட்டோம். மேலும் உனது ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு நற்செயல் எழுதி விட்டோம். இதைக் கேட்டதும் அந்த மனிதன் தன் சுயநினைவை இழந்தவனாக மகிழ்ச்சியில் உரத்து இவ்வாறு கூறினான். இறைவா! இவை எல்லாம் எனது சிறிய பாவங்கள் தாம். எனது பெரிய பாவங்கள் இன்னும் வாசிக்கப்படவில்லை. அவற்றையும் உன் முன்னால் வைக்க வேண்டும். இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் சிரித்து விட்டனர். அவன் தனது அவசரத்தனத்தால் தர்மசங்கடப்பட்டான். பின்னர் சுவர்க்கம் நோக்கிச் சென்றான். அங்கு ஒரு மலக்கு அவனை அல்லாஹ்வின் மன்னிப்பின் போர்வையில் போர்த்தினார்.

நானும் குஃப்ரானும் இன்னும் பல காட்சிகளைக் கண்டோம்.

(காட்சிகள் தொடரும்...)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

3

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

### உலகம் ஆயத்தமாகிறது

புகழ்பெற்ற இளவரசர் ஒருவர் தம்முடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிக்கு வருகை தருகிறார் என்றால் அது அப்பகுதியில் மிகுந்த ஆரவாரத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு துறையும் முடுக்கி விடப்படும். நாடு, நகரம் முழுவதும் அந்நிகழ்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். குற்றம் புரிவோரையும், குழப்பம் விளைவிப்போரையும் எச்சரிக்கை செய்வதற்கான இராணுவ அணிவகுப்புகள் நடத்தப்படும். இளவரசர் செல்லும் பாதையை சீராக்குவதற்கும், அலங்கரிப்பதற்கும், பயணத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் வேண்டிய எல்லா முயற்சிகளும் செய்யப்படும். அவரைக் கண்ணியப்படுத்தும் விதத்தில் கைதிகள் விடுவிக்கப்படுவர். மன்னரின் கருணையைக் குறிக்கும் விதத்தில் குற்றங்கள் மன்னிக்கப்படும். அந்த நல்ல சந்தர்ப்பத்தில் அனைவரும் மகிழ்ச்சியோடு பங்கேற்பதற்காக இவையனைத்தும் செய்யப்படும்.

ஓர் இறை தூதரின் வருகையும் இதையொத்ததுதான். இறைவன் அகிலத்தின் முழுமையான ஆட்சியாளன். அவனுடைய தூதர்கள் அனைவரும் தெய்வீக இளவரசர்கள் ஆவார்கள். எப்பொழுதெல்லாம் உலக இருள் சூழ்ந்து தீமை மேலோங்குமோ, தீய பண்புகள் அதிகரித்து நற்பண்புகள் குறையுமோ, நேர்மை அரிதான ஒன்றாகி விடுமோ, கொடிய தன்மை அதிகரிக்குமோ, அப்படிப்பட்ட காலங்களில் உலகை சீர்திருத்தி அதற்குப் புத்துயிர் வழங்கி, அதனை மீண்டும் இறைவன் பக்கம் கொண்டு வருவதற்காக ஓர் இறை தூதரை எழுப்ப வேண்டியது இறை கருணையின் கடமையாக இருக்கிறது. எனவே மலக்குகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு அவரது வருகைக்கான ஆயத்தம் செய்யப்படுகின்றன. தீய சக்திகளுக்கு எதிராகச் செயல்படுவதற்கான இயக்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. மக்களின் உள்ளங்கள் இறைவன் பக்கம் சாய்கின்றன. உண்மையைப் பரப்புவதற்கு உதவிகரமாக அமையும் வசதிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவருடைய வேலையை துவக்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்-படுகின்றன; ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் இவையனைத்தும் ஒரு தனிப்பட்ட விதத்தில் அமைகின்றன. இறைவனுடைய கை செயல்படுவதை எல்லாக் கண்களாலும் காண முடிவதில்லை. அவனுடைய அடியாரின் பணி பெரும்பாலும் மிகவும் எளிமையான விதத்தில் ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் உலகியல் வசதிகள் அவருக்கு இருப்பதில்லை. மிகுந்த சிரமங்களுக்கிடையே அவர்தம் பணியைச் செய்கிறார்; ஆனால் மிகவும் ஆச்சரியமான விதத்தில் மலக்குகள் அவருக்கு உதவி செய்கின்றனர். முடிவில் நற்பண்புகள், அமைதி, வளமை கோலோச்சும் ஓர் அமைப்பை நிறுவுவதில் அவர் வெற்றி பெறுகிறார். 1835 –ஆம் ஆண்டு பிறந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் தோற்றத்திலும் இதுவே நிகழ்ந்தது.

போப்பின் ஆதிக்க அமைப்புதான் முத்தெய்வக் கொள்கையின் மிகப்பெரும் பலமாக விளங்கியது. எனவே இறைவனின் ஏகத்துவம் அதற்கெதிராக நகர்ந்தது. கிறித்தவ மார்க்கத்தின் உள்ளுக்குள்ளிருந்தே சில சந்திகள் கிளர்ந்தெழுந்து அதன் கவுரவத்தைப் பாதிக்கும் விதத்தில் செயல்பட்டு, அதன் கோட்டையைத் தகர்க்கும் ஒருவர் தோன்றப்போவதைப் பற்றி எச்சரிக்கை செய்தன. 1812 –ஆம் ஆண்டு நெப்போலியன் ‘இறைவன் பெற்றெடுத்த ஒரே மகனின்’ அப்போதைய பிரதிநிதியாகக் கருதப்பட்ட ஏழாம் பயஸை ஃபான்டென்ப்ளூ மாளிகைக்கு அனுப்பி வைத்த பொழுது கிறித்தவ உலகின் அடித்தளமே ஆட்டம் கண்டது. அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகள் சிலுவையின் சக்தியை நிலைநிறுத்துவதற்கான முயற்சியில் இறங்கின.

1815 –ஆம் ஆண்டு ரஷ்யப் பேரரசர், ஆஸ்திரியப் பேரரசர், ப்ரஸ்ஸியா மன்னர், பிற ஐரோப்பிய மன்னர்கள் ஒன்றிணைந்து ‘புனித கூட்டணி’ என்னும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும்



ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். தாங்கள் புனித மார்க்கத்திற்குச் சேவை செய்யவும், அதனை நிலை நிறுத்துவதற்கும் தங்களால் முடிந்த அளவு முயற்சித்தனர். ஆனால் அது நிறைவேறவில்லை. இறைவன் வேறு விதமாக முடிவு செய்திருந்தான். (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது ஆகிய) சமாதானத் தூதுவர் சிலுவையை முறிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். எனவே அவர்களின் புனிதக் கூட்டணி கேஸ்லர்ரீயின் இராஜதந்திரத்தால் முறியடிக்கப்பட்டது. அந்த முயற்சி 1823 –ஆம் ஆண்டு ஒரு முடிவுக்கு வந்தது.

1830 –ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரீஸ் புரட்சி அந்த புனித மதத்திற்குப் பேரிடியாக அமைந்தது; அதன் கவுரவத்தை மேலும் குறைத்தது. அது ஃபிரான்சில் முதலாளித்துவ முடியாட்சியைத் தோற்றுவித்தது. கத்தோலிக்கம், அரசாங்க மதம் என்னும் தனது முதன்மை நிலையை இழந்தது. பாரீஸ் புரட்சியின் தாக்கம் ஐரோப்பா முழுவதும் உணரப்பட்டது.

1831 –ஆம் ஆண்டு ரோமாக்னா, மார்ச்செஸ் என்னும் இத்தாலியப் பிரதேசங்கள் எழுச்சி பெற்று, போப்பின் ஆதிக்கம் என்னும் நுகத்தடியை மிகவும் எளிதாகத் தூக்கி எறிந்தன. ஐரோப்போ முழுவதும் விடுதலை இயக்கங்கள் முன்னேற்றம் கண்டன.

துருக்கி முஸ்லிம் கிலாஃபத்தின் தலைமையகமாகக் கருதப்பட்டது. துருக்கிய மன்னர் மீது மார்க்க ரீதியான ஒளிவட்டம் சுழன்றது. ஆனால் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் தோற்றத்தின் மூலம் உண்மையான கிலாஃபத்தை உலகில் நிறுவ வேண்டியது இருந்ததால், துருக்கி அதன் பெருமையையும், அதிகாரத்தையும் இழக்க வேண்டியதாயிற்று. 1832 –ஆம் ஆண்டு அது கிரீஸ் நாட்டை இழந்தது. இலண்டன் ஒப்பந்தத்தின்படி அந்நாடு சுதந்திர நாடானது. 1830 –ஆம் ஆண்டு ஃபிரான்ஸ் அல்ஜீயர்ஸ் நாட்டின் மீது குண்டு வீசி அதனைக் கைப்பற்றியது. துருக்கியின் பெருமைக்குப் பேரிடியாக அமைந்தது. 1831 –ஆம் ஆண்டு எகிப்திய வைஸ்ராயான முஹம்மது அலி சிரியாவின் மீது படையெடுத்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டார் என்ற செய்தி கான்ஸ்டாண்டி நோபிளை எட்டியதும், போஸ்னியாவிலும், அல்பேனியாவிலும் ஏற்பட்ட புரட்சிகளால் துருக்கியின் நிலை மேலும் மோசமானது. போலியான கலீஃபாவுக்கு எதிராக, (எகிப்திய வைஸ்ராயான) முஹம்மது அலியே இஸ்லாத்தின் உண்மையான தலைவராக கருதப்பட்டார். அவர் புனித நகரங்களுக்கும், சிரியாவுக்கும் அதிபதி ஆனார். துருக்கிய சாம்ராஜ்ஜியம் அவர்முன் சரிந்தது.

மற்றொரு புறம், 1833 –ஆம் ஆண்டு ஏற்பட்ட 'உங்கியார்ஸ்கெலஸ்ஸி' ஒப்பந்தம் துருக்கியை முற்றிலுமாக ரஷ்யாவின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதாக இருந்தது. வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றி இந்த உலகத்திற்கு புத்துயிர் வழங்க வேண்டியிருந்த காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சி, அன்னார் பிறந்த சமயத்தில் உலகின் பல பாகங்களில் நிறுவப்பட்டிருந்தது. மேற்கில் பிரிட்டிஷ் கயானா, டிரினிராட், அல்பெர்ட்டா, மானிடோபா ஆகிய பகுதிகளை பிரிட்டிஷ்ஷார் கைப்பற்றியிருந்தனர். தெற்கில் அவர்கள் ஜிப்ரால்டர், சிரால்யோன், அஸென்ஸன், தென் ஆப்பிரிக்கா, மொரீஷியஸ், டிரிஸ்டன் டா குன்ஹா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி இருந்தனர். கிழக்கில் அவர்களுடைய பேரரசு மால்டா, ஏடன், இந்தியா, இலங்கை, ஸ்ட்ரெய்ட் செட்டில் மெண்ட், ஹாங்காங், ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா, நியூசிலாந்து ஆகிய பகுதிகள் வரை பரவியிருந்தது.

1829 –ஆம் ஆண்டு கத்தோலிக்க விடுதலை மசோதா நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் பணிக்கு மிகவும் அவசியமான மார்க்க விஷயங்களில் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளும் உணர்வின் வெற்றி இங்கிலாந்து நாட்டில் முழுமை பெற்றது. சமூக விஷயங்களில் பாரபட்சம் காட்டுவதை ஒழிப்பது, அரசியல் உரிமைகளில் சமத்துவம் பாராட்டுவது ஆகிய கொள்கையின் அடிப்படையில் அமைந்ததுதான் இந்த நடவடிக்கையாகும். கத்தோலிக்கர்கள் தாம் உறுதிமொழி எடுக்கும் பொழுது, மன்னரைப் பதவி நீக்குவதற்கு போப்பிற்கு உள்ள உரிமையையும் உலகியல் விஷயங்களில் அவருக்கு இருந்து வந்த அதிகாரத்தையும் மறுக்க வேண்டியதிருந்தது.

இந்தியாவில் மார்க்கத்தின் பெயரால் நிகழ்ந்து வந்த சில தகுதியற்ற கொடுமையான சடங்குகளை ஒழித்ததன் மூலம் லார்டு பெண்டிக் என்பார் சில ஆயத்த வேலைகளைச் செய்தார். அவர் மனிதர்களை இழிவுபடுத்தும் சில செயல்களை ஒழித்து, ஓரளவுக்குப் பேச்சுரிமையை வழங்கினார்.

தாங்களே ஏற்படுத்திக் கொண்ட எல்லைகளுக்குள் அடைபட்டுக் கிடந்த சிலரது மனவோட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. உதாரணமாக ஜப்பானின் தன்னிறைவுத் தன்மை பாதிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் சொசைட்டியும், பைபிள் சொசைட்டியும் இணைந்து ஆரம்பித்த கிறித்தவப் பிரச்சாப் பணியும் 1804 –ஆம் ஆண்டு உலகம் முழுவதும் பரவியது. உலகம் முழுவதும் கிறித்தவப் பிரச்சாரகர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். எல்லா மொழிகளிலும் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது. உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய அனைத்து இறை தூதர்களின் பணியையும் முழுமைப்படுத்தும் பணி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் மூலமாகவே உலகில் உள்ள எல்லா சமுதாய மக்களுக்கும் பிரச்சாரம் செய்து அவர்களை ஒரே சகோதரத்துவ கட்டுக்குள் கொண்டு வர வேண்டிய பணி நிறைவேற்றப்பட வேண்டியதிருந்ததாலும், அவர்களுடைய முன்னோர்களுக்கு இல்லாத பல வசதிகள் அவர்களுக்காக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட வசதிவாய்ப்புகள் தனிப்பட்டவையாகும். அவர்களுடைய தோற்றத்திற்கு முன் புவியியல் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டது மட்டுமல்லாமல் அதுவரை இல்லாத அளவுக்கு உலகின் பல பகுதிகளை ஒன்றோடொன்று மிகவும் நெருக்கமாகக் கொண்டு வரும் கண்டுபிடிப்புகளும் தோன்றின. உலகளாவிய பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான வழிவகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. நேரத்தையும், தூரத்தையும் இல்லாமை ஆக்குகின்ற தொலைத் தொடர்பு சாதனங்கள் உருவாக்கப்பட்டன.

பனாமா கால்வாயைப் போன்று ஒரு கால்வாயை உருவாக்குவதற்காக 1883 –ஆம் ஆண்டு ப்ராஸ்பர் எனான்டின் என்பவர் எகிப்துக்கு வருகை தந்தார். இது உலகத்திற்கு புத்துயிர் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட புனித ஸைமன் திட்டத்தின் ஓர் அம்சமாக இருந்தது. சூயஸ் கால்வாய் அமைக்கும் பணி 1865 –ஆம் ஆண்டு முழுமை பெற்றது. இது நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு கீழத்தேய நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நீண்ட சிரமமிக்க பயணத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு எளிதாக்கியது.

18 –ஆம் நூற்றாண்டின் இறுதியில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. நீராவியில் இயங்கும் பொது உபயோகத்திற்கான முதல் அச்சு இயந்திரம் 1814 –ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது.

போக்குவரத்து சாதனங்களைப் பொருத்தவரையில், பொதுப் பயன்பாட்டிற்கான முதல் நீராவி எஞ்சின் 1802 –ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1824 –ஆம் ஆண்டு வாக்கில் அதுபோன்ற பல இயந்திரங்கள் பெருமளவில் வெற்றிகரமாக உபயோகத்திற்கு வந்தன. பெட்ரோலியம் வாயுவால் இயங்கும் மோட்டார் 1885 –ஆம் ஆண்டு டைம்லர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் நீராவிக் கப்பல் 1815 –ஆம் ஆண்டு லிவர்பூலுக்கும் க்ஸாஸ்கோவிற்கும் இடையில் விடப்பட்டது. 1825 –ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் இருப்புப் பாதை அமைக்கப்பட்டது.

1820 –ஆம் ஆண்டு மின்தந்தி பயன்பாட்டுக்கு வந்தது. இதன் மூலம் உலகின் பல பாகங்களுக்கு இடையேயான தொடர்புகள் அதிகரித்தன. 1832 –ஆம் ஆண்டு மின்காந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டது.

1846 –ஆம் ஆண்டு மருத்துவத்தில் பயன்படும் மயக்க மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. காயங்களைக் குணமாக்குவதில் ஆன்டிசெப்டிக் மருந்துகளின் முக்கியத்துவம் 1867 –ஆம் ஆண்டு பெருவாரியாக ஒப்புக் கொள்ளப்பட்டது. நுண்கிருமிகளால் பரவும் நோய்களைப் பற்றிய பாய்ஸ்டரின் ஆய்வுகள் 1850 –ஆம் ஆண்டு வாக்கில் துவங்கின. மலேரியாவை ஏற்படுத்தும் நுண்கிருமியும், காசநோய்க் கிருமியும் 1880 –ஆம் ஆண்டு பிரித்தெடுக்கப்பட்டன.

1879 –ஆம் ஆண்டு வியாபார ரீதியான மின் விளக்குகள் பயன்பாட்டுக்கு வந்தன. 1876 –ஆம் ஆண்டு தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது. 1895 –ஆம் ஆண்டு எக்ஸ்ரே கண்டுபிடிக்கப்பட்டது.

மக்களின் மனங்களும் வரவிருக்கும் நிகழ்ச்சியை எதிர்கொள்ளத் தயாராயின. எல்லா மதங்களைச்

(தொடர்ச்சி 22 -ஆம் பக்கம்...)



# ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை 3



மவ்லவி S. அப்துல் காதிர்

**ஹ**ஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வாதம் புரிந்து ஏழு ஆண்டுகள் கழிந்திருந்த நிலையில், மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களின் மீது தம் வெறுப்பையும் எதிர்ப்பையும் தொடர்ந்து காண்பித்து வந்தனர். பலவிதமான துன்பங்களையும் அநீதிகளையும் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இறைவனின் பேருதவி மற்றும் உண்மையின் ஆற்றலால் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அவர்களின் தோழர்கள் தாம் கொண்டிருந்த நம்பிக்கையிலும் உறுதிப்பாட்டிலும் சிறிதும் மாறவில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த துன்பங்கள் யாவும் அவர்களின் நம்பிக்கையை இன்னும் வலுப்படுத்தியதே தவிர சற்றும் குறைக்கவில்லை. எனவே, நிராகரிப்பாளர்கள் இந்த துன்பங்கள் எல்லாம் போதாது என்று கருதி இதில் இன்னும் ஒருபடி முன்னேறி, இந்த எதிர்ப்புகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி சமூகப் புறக்கணிப்பாக ஒருமுகப்படுத்த திட்டமிட்டனர்.

அதன் ஓர் அங்கமாக, முஸ்லிம்களுடன் எந்த விதமான கொடுக்கல் வாங்கலும், வியாபாரமும், சமூக தொடர்பும் – ஏன் பேச்சு வார்த்தை கூட வைத்துக் கொள்ளக் கூடாது என்று தீர்மானம் எழுதி அதில் மக்காவின் தலைவர்கள் கையொப்பமிட்டு இறை ஆலயமான கஅபத்துல்லாஹ்வில் தொங்கவிட்டனர். இது நடந்தது நுபுவ்வத் ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) மற்றும் அவர்களின் தோழர்கள் எல்லாரும் ஷுஅப் அபீதாலிப் என்றழைக்கப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் நகரத்தின் பிற மக்களால் கைவிடப்பட்ட நிலையில் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

இந்த கொடுமை மிகுந்த காலகட்டமானது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் வாழ்வில் கடந்து சென்ற பல துன்பமான தருணங்களில் மிகவும் பயங்கரமான காலகட்டம் என்று சொன்னால் அது மிகையல்ல. ஒரு மனிதன் தன் மீது இழைக்கப்படும் கொடுமைகளை எப்படியும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் தான் நேசிக்கும் மக்கள் தன் கண்ணெதிரே துன்பப்படுவதை பார்த்துக் கொண்டிருப்பது என்பது அதை விட பெரும் துன்பம். பனூ ஹாஷிம் மற்றும் பனூ முத்தலிப் ஆகிய இரண்டு கோத்திரங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் மற்றும் சில முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர். இந்த பயங்கரமான இன்னல்கள் நிறைந்த காலகட்டத்தை எண்ணி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் பலமுறை வேதனையால் மனம் வருந்தி இருக்கிறார்கள்.

நிராகரிப்பாளர்கள் மற்றும் இணைவைப்பவர்களின் பார்வையில் வேண்டுமானால் இது இஸ்லாத்தை அழிப்பதற்கான ஒரு நல்ல திட்டமாக இருந்திருக்கலாம். இதிலும் அவர்கள் தோல்வியடைந்தனர் என்பதே வரலாற்று உண்மை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோழர்களுக்கு இந்த சோதனையான காலகட்டம் இஸ்லாத்தின் எதிர்கால வெற்றிகளை தீர்மானிக்கும் மாபெரும் மகத்துவம் நிறைந்த பொற்காலமாகவே இருந்தது. ஏனென்றால், ஷுஅப் அபீதாலிப் என்ற இந்த பள்ளத்தாக்கில் முஸ்லிம்கள் ஊரை விட்டு விலக்கி வைக்கப்பட்டு, சமூக புறக்கணிப்புக்கு ஆளாகி, ஆதரவற்ற நிலையில் இருந்த இந்த தருணத்தில் தான் இறைவனின் தனிப்பெரும் ஆற்றல் வாய்ந்த நல்லாதரவை தெள்ளத் தெளிவாக உணர்ந்தனர்.

இதனைப் புரிந்து கொள்வதற்காக முதலில் அந்த பள்ளத்தாக்கில் முஸ்லிம்கள் அனுபவித்து கஷ்டங்களை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் சஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) கூறுகிறார்கள்: பட்டினியால் வாடிக் கொண்டிருந்த எனக்கு ஒருமுறை ஒரு துண்டு காய்ந்த தோல் கீழே இருந்து கிடைத்தது. அதனை எடுத்து வந்து தண்ணீரில் நனைத்து, சுத்தம் செய்து பின்னர் அதனை அரைத்து மூன்று நாட்கள் அதையே உண்டு வந்தேன்.

பசியின் காரணமாக குழந்தைகளின் அழுகுரல் எப்போதும் கேட்டுக் கொண்டே இருந்தது. இவ்வாறு மூன்று ஆண்டுகள் கழிந்தன. இந்தக் கொடுமையின் தீவிரத்தால் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஷஹீதானார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த காலகட்டம் உடலளவில் மட்டுமல்லாது மனதளவிலும் மாபெரும் உளைச்சலையும் துன்பத்தையும் தந்தது.

மறுபக்கம், இந்த கஷ்டமான நாட்களுக்கிடையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு அல்லாஹ்வின் உதவியின் அடையாளங்களும் வெற்றிக்கான அறிகுறிகளும் காட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூதாலிப் அவர்களை அழைத்து, இறைவனிடமிருந்து தாம் பெற்ற ஓர் அறிவிப்பை எடுத்துக் கூறினார்கள். அதாவது, எங்களை ஊர் நீக்கம் செய்து, சமூகப் புறக்கணிப்பு செய்ய தீர்மானித்து எழுதப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் இறைவனின் பெயர் வரும் இடங்களைத் தவிர ஏனைய பகுதிகளை கரையான் தின்று விட்டது என்று கூறினார்கள். அபூதாலிப் இறை ஆலயமான கஅபத்துல்லாஹ்வுக்குச் சென்று மக்கத்து தலைவர்களை அழைத்து என் சகோதரரின் மகன் முஹம்மது இவ்வாறு கூறுகிறார் என்று இந்தச் செய்தியைச் சொன்னதும்; அந்த தீர்மானத்தை எடுத்துப் பார்த்து ஆச்சயரியத்தில் உறைந்தே போயினர். அது அப்படியே சொல்லுக்குச் சொல் சரியாக நிகழ்ந்திருப்பதற்கு அவர்களே சாட்சியும் பகர்ந்தனர். பின்னர் அந்த தீர்மானம் முற்றிலும் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டது. முஸ்லிம்கள் ஊருக்குள் வந்து தம் சகஜமான வாழ்க்கையை வாழத் தொடங்கினர். இது நுபுவ்வத்தின் பத்தாம் ஆண்டு காலமாகும்.



இதே காலகட்டத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிஃராஜ் சம்பவம் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மீகமான முறையில் விண்ணுக்குச் சென்று வந்த பயணம் மற்றும் ஷக்குல் கமர் அதாவது நிலவு இரண்டாக பிளந்தது போல் காட்சியளித்த சம்பவம் ஆகிய இரண்டு அற்புதங்கள் நிகழ்ந்தன. இவை வருங்காலத்தில் இஸ்லாத்திற்கு கிடைக்கவிருந்த வெற்றியை அடையாளப்படுத்திய அற்புத நிகழ்வுகளாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களில் மிகவும் உன்னதமான அற்புதம் சீர்திருத்தம் என்ற மாபெரும் நிகழ்வு. இது குறித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ், இமாம் மஹ்தி மற்றும் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) சமாதானத் தூது என்ற தமது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

இந்த நபி உலகிற்கு வந்து என்ன சீர்திருத்தம் செய்தார் என்ற கேள்வி எழுகிறது. இந்த கேள்விக்கான பதிலை, எவ்வாறு ஒரு முஸ்லிம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்திட்ட சீர்திருத்தம் பற்றி கூற முடியுமோ அவ்வாறு எந்தவொரு கிறித்தவரும், யூதரும், ஆரியரும் (தமது நபியைக் குறித்து) கூற முடியாத அளவில் தெளிவான, ஆதாரப்பூர்வமான பதிலை வலுவான சான்றுகளுடன் எடுத்துக் கூறுகிறேன்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் நோக்கம், அரேபியாவின் சீத்திருத்தமாக இருந்தது. அம்மக்களிடம் இல்லாத தீமை ஏது? அவர்களிடம் இல்லாத இணை வைத்தல் ஏது? திருடுவதும், கொள்ளையடிப்பதும் அவர்களது தொழிலாக இருந்தது. காரணமின்றி கொலை செய்வது ஒரு எறும்பைக் காலால் நசுக்குவது போன்ற சாதாரண செயலாக அவர்களிடம் காணப்பட்டது. குழந்தைகளைக் கொன்று அவர்களின் செல்வங்களை அபகரித்து வந்தனர். பெண் சிசுக்களை உயிருடன் புதைத்து வந்தனர். விபச்சாரத்தை பெருமைப்படுத்திக் கொண்டிருந்தனர். வெளிப்படையாக தங்களது கவிதைகளில் அந்த அசுத்தமான காரியங்களை பாடி வந்தனர். மது அருந்துவது அச்சமுதாயத்தில் எல்லா வீடுகளிலும் இருந்து வந்த வழக்கமாக இருந்தது. சூதாடுவதில் எல்லா நாடுகளை விடவும் முன்னேறி இருந்தனர். மிருகங்களைப் போன்று மானமின்றியும், பாம்புகளையும் ஓநாய்களையும் போன்று வெட்கமின்றியும் வாழ்ந்து வந்தனர்.

எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அம்மக்களின் சீர்திருத்தத்திற்காக நின்று தமது ஆழ்ந்த கவனத்தால் அவர்களது மனதை தூய்மைப்படுத்த விரும்பிய போது, அவர்களிடையே சிறிது நாட்களிலேயே மாற்றங்கள் உருவாகின. அதனால் அம்மக்கள் மிருகத்தமான நிலையில்

இருந்து மனிதனாகி, பிறகு மனிதனிலிருந்து நாகரீகமுள்ள மனிதனாக உயர்ந்து, நாகரீகமுள்ள மனிதன் என்ற நிலையிலிருந்து இறைவனைச் சார்ந்த மனிதனாகி, இறுதியில் இறைவனின் அன்பில் மூழ்கி உன்னத தன்மையை அடைந்தனர்.

இவ்வாறு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தம் வருகையின் நோக்கத்தில் வெற்றி கண்டார்கள். இதன் மாபெரும் அடையாளமாக ஹிஜ்ரி 8 –ஆம் ஆண்டு ரமலான் மாதம் பிறை 10 அன்று அதாவது டிசம்பர் 629 –ஆம் ஆண்டு பத்தாயிரம் சஹாபிகளுடன் எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியான முறையில் மக்காவின் எல்லா திசைகளின் வழியாகவும் வெற்றி வாகை சூடியவர்களாக இஸ்லாமிய படையுடன் நுழைந்தார்கள். மர்ருழ்ழஹரான் எனும் மைதானத்தில் இரவு நேரம் ஒவ்வொரு கூடாரத்திலும் தனித்தனியாக தீ பந்தம் ஏற்றி வைக்குமாறு கூறப்பட்டது. இஸ்லாமிய படையை வேவு பார்ப்பதற்காக வந்தவர்கள் இந்த காட்சியைக் கண்டு வியப்பின் விளிம்புக்கே சென்று விட்டனர்.

ஒரு காலத்தில் இந்த இணைவைப்பவர்கள் முஸ்லிம்களின் மீதும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் நடத்திய கொடுமையின் காட்சிகளெல்லாம் ஒரு கணம் அவர்களின் நினைவில் வந்ததும் அந்த சிந்தனையே அவர்களின் குற்றத்திற்கு சாட்சிகளாக வெளிப்பட்டு அவர்கள் தம்மைத்தாமே குற்றவாளிகள்என்று தீர்மானித்ததன் விளைவாக, இனி மக்காவில் இருந்தால் நமது உயிருக்கு எவ்வித பாதுகாப்பும் கிடையாது என்று எண்ணி அபூ ஸுஃப்யான் மற்றும் இக்ரிமா போன்றோர் மக்காவை விட்டே ஓடி தப்பிவிட எண்ணினர்.

அப்போது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானுக்கு அடைக்கலம் அளித்து பாதுகாப்பதாக பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இதன் பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரெல்லாம் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் அடைக்கலம் பெறுகிறாரோ அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று பொது அறிவிப்பு வழங்கினார்கள். அதுமட்டுமல்ல; இன்னும் யாரெல்லாம் பிலால் (ரலி) அவர்களின் கொடியின் கீழ் அடைக்கலம் தேடி வருவாரோ அவருக்கும் மன்னிப்பும் உண்டு என்றார்கள். மேலும் யார் தத்தமது வீடுகளுக்குள் சென்று அமைதியாக கதவுகளை தாழிட்டுக் கொள்வாரோ அவர்களுக்கும் மன்னிப்பு உறுதி செய்யப்படுகிறது என்று அறிவித்தார்கள்.

உஸ்மான் பின் தல்ஹாவிடமிருந்து இறை ஆலயமாகிய கஅபத்துல்லாஹ்வின் திறவுகோலை வாங்கி வரச் செய்து அங்கிருந்த சிலைகளை அகற்றி ஆக்கப்பூர்வமான முறையில் ஏகத்துவத்தை நிலைநாட்டியபின் அங்கு வலம் வந்து மீண்டும் அந்த இறை ஆலயத்தின் திறவுகோலை அவரிடமே திருப்பி ஒப்படைத்து தமது உயர்ந்த நல்லொழுக்கத்தை மீண்டும் நிலைநாட்டினார்கள்.

அப்போது ஆற்றிய உரையில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கத்துவாசிகளே! இன்று உங்கள் பேரில் எந்தக் குற்றமுமில்லை. இன்று முதல் நீங்கள் எல்லாரும் சுதந்திரமானவர்கள். இவ்வாறு உயிரைக் குடிக்கக் காத்துக் கொண்டிருந்த தம் எதிரிகளின் மீது முழுமையான ஆதிக்கம் பெற்றிருந்த போதிலும் அவர்களை எந்தவித நிபந்தனையும் இன்றி உள்ளத்தின் ஆழத்திலிருந்து அன்பு கூர்ந்து கருணையுடன் மன்னித்தார்கள். அவ்வாறு மன்னிக்கும் தருவாயில் கூட யாருடைய சுய மரியாதையும் பாதிக்கும் வகையில் நடத்தவில்லை.

(தொடரும்...)



(9-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

அவனே அதனை வளர்ப்பான். அதனை செழிப்படையச் செய்வான். எதுவரை எனில் அவர்களின் பெரும்பான்மை மற்றும் அருள் பார்வைகளின் கண்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். மேலும் அவர்கள் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்ட தீபத்தைப் போன்று உலகின் நாலா புறமும் தமது ஒளியை பரப்புவார்கள். மேலும் (மார்க்க) அருள்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வார்கள். இந்த கூட்டத்தின், முழுமையாக பின்பற்றுபவர்களை அனைத்து வித அருள்களிலும் இதர கூட்டத்தினரை விட மேலோங்கச் செய்வான். மேலும் எப்போதும் மறுமை வரை அவர்களிடையே, ஒப்புக்கொள்ளப்படும் மற்றும் உதவி வழங்கப்படும் மக்கள் பிறந்து கொண்டே இருப்பார்கள். அந்த வல்லமை மிக்க இறைவன் இதனையே நாடியுள்ளான். அவன் தான் நாடியதை செய்ய வல்லமை மிக்கவன் ஆவான். எல்லாவித ஆற்றலும் வல்லமையும் அவனுக்கு உரித்தானது.

எனவே இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும் இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டு நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்து விட்டது. இன்று வரை நாம் இந்த முன்னறிவிப்பின் ஒவ்வொரு வார்த்தையும் எத்தகைய சிறப்புடன் முழுமை அடைந்து வருகின்றது என்பதை கண்டு வருகிறோம் என்பதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு சான்றாகும். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் உலகின் எல்லா கண்டங்களிலும் பரவியுள்ளது. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தொண்டர்கள் தனது காலத்தின் கலீ.்.பா மற்றும் இமாம் சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது நிழலின் கீழ் உலகத்தின் மீது மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யும் விண்ணக குறிக்கோளில் முழு மூச்சுடன் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இறுதியில், அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அனைத்து அன்பர்களுக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது நாட்டத்திற்கு ஏற்ப பைஅத் நிபந்தனைகளின் படி செயல்பட்டவர்களாக தமது வாழ்வை சிறப்பானதாக ஆக்கும் நல்வாய்ப்பை தந்தருள்வானாக. மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்காக செய்த துஆக்களுக்கு நம்மை எப்போதும் வாரிசாக்குவானாக. ஆமீன்.

(18-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

சேர்ந்தவர்களும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். முஸ்லிம்கள் தங்கள் வேதத்தில் காணப்பட்ட முன்னறிவிப்புகளின் அடிப்படையில் மஹ்தியையும், மஸீஹையும் எதிர்பார்த்தனர். அவர்களின் எதிர்பார்ப்பு இயேசுவின் காலத்தில் இருந்த யூதர்களின் எதிர்பார்ப்பைப் போன்று வேடிக்கையானதாகவும், வினோதமானதாகவும் இருந்தது. அவர்கள் ஓர் உலகியல் அரசராகவும், இறை மறுப்பாளர்கள் அனைவர் மீதும் ஒரு புனிதப் போர் தொடுத்து அனைவரையும் கொன்று அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட பொற்காலத்தை உருவாக்கும் இரத்த வெறி பிடித்த ஒரு போர் வீராகவும் அவரை எதிர்பார்த்திருந்தனர்.

1831 –ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் மில்லர் என்பவர் தானியேல் 8:14 –ல் குறிப்பிடப்படும் 2300 நாட்கள் என்பது 2300 ஆண்டுகளைக் குறிக்கும் என்று தம் உரைகளில் குறிப்பிடலானார். இந்த 2300 ஆண்டுகள் என்பது கி.பி. 457 –ல் எஸ்ரா தீர்க்கதரிசி ஜெரூஸலத்திற்குப் போனதிலிருந்து ஆரம்பமாகின்றது என்றும், அது 1843 –ஆம் ஆண்டோடு முடிவையும் என்றும் குறிப்பிட்டார். மேலும் மில்லர் தம் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களை இயேசுவின் இறுதி வருகைக்கு தயாராகும்படிக் கேட்டுக் கொண்டார். ரோமானிய ஆண்டு கணக்குப்படி அது 1844 –ஆம் ஆண்டாக இருக்கும் என்றும், அவர் கூறினார். இதைக் கேட்டு மிகுந்த ஆரவாரம் ஏற்பட்டது. பலர் தங்கள் வியாபாரங்களை விட்டு விட்டு வெள்ளை மஸ்லின் ஆடைகளை அணிந்து கொண்டு வீடுகளின் மொட்டை மாடிகளிலும், உயரமான குன்றுகளிலும் ஏறி நின்று அந்த விழாவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

ஸ்காட்லாந்து நாட்டு கிறித்தவ தேவாலயத்தைச் சேர்ந்தவரும், கத்தோலிக்க அப்பாஸ்டலிக் சர்ச் என்ற அமைப்பை நிறுவியவருமான எட்வர்ட் இர்விங் (1792–1834) என்பவரும், இயேசுவின் இரண்டாம் வருகை அண்மையில் நிகழவிருப்பதாக நம்பிக்கை தெரிவித்தார்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் பிறந்த சமயத்தில் இன்னோர் இயக்கம் வலுப்பெற்று வந்தது. அது விண்ணுலகத்தில் ஊதப்படும் எக்காளம் போல அது மனித குலத்தின் எழுச்சிக்கான அடையாளமாக அமைந்தது. அது உலகிலுள்ள அடிமைகளின் விடுதலைக்கான இயக்கமாக இருந்தது. காரிஸ்ஸன் என்பவர் 1831 –ஆம் ஆண்டு போஸ்டனில் 'லிபரேட்டர்' என்னும் அமைப்பைத் துவங்கினார். அது முடிவில் உலகம் முழுவதும் பரவி, எல்லாப் பாகத்தையும் சென்றடைந்த ஒரு போராட்டத்தின் துவக்கமாக அமைந்தது. 1833 –ஆம் ஆண்டு அடிமை ஒழிப்புச் சங்கம் ஆரம்பிக்கப் –பட்டது. ஆங்கிலேயப் பேரரசு முழுவதும் அடிமை விடுப்புச் சட்டம் 1834 –ஆம் ஆண்டு செயல்முறைக்கு வந்தது. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான அடிமைகள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர். இது இராஜ குமாரன் ஒருவர் பிறக்கும் பொழுது நாட்டிலுள்ள கைதிகளையும், அடிமை –களையும் விடுவிக்கும் பண்டைக்கால வழக்கத்தை ஒத்திருந்தது.

இத்தனை மகத்தான எதிர்பார்ப்புகளோடும், பிரமாண்டமான ஆயத்தங்களோடும் நடைபெற்ற அந்த பிறப்பு உண்மையிலேயே ஓர் இளவரசரின் பிறப்பாகவே அமைந்திருந்தது. (தொடரும்...)

*(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

## உயிர், சொத்து, கண்ணியம் மற்றும் குழந்தைகளை தியாகம் செய்வதாக உறுதியளிப்பு

மற்றொரு நிபந்தனையின்படி, மார்க்கம் மற்றும் மார்க்கத்தின் கண்ணியம் மற்றும் இஸ்லாத்தின் மீதான அனுதாபத்தை, தனது உயிரை விடவும், தனது செல்வத்தை விடவும், தனது கண்ணியத்தை விடவும், தனது குழந்தைகள் மற்றும் தனது அன்புக்குரியவர்கள் ஒவ்வொருவரையும் விடவும் விரும்புவதாக உறுதியளிக்கிறார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது சிறப்பு நண்பரான ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களை பற்றி கூறினார்கள்: "அனைத்தையும் விட முதலாக நான், என்னுடைய ஆன்மீக சகோதரர் ஒருவரை இங்கு குறிப்பிடும்போது என் மனம் பெரிதும் நெகிழ்ந்து விடுகிறது. அவருடைய கலப்பற்ற ஒளியைப் போலவே அவருடைய பெயரும் நூருத்தீன் (மார்க்கத்தின் ஒளி) என்பதாகும். இஸ்லாத்தை பரப்பும் பணிக்காக தாம் சம்பாதித்த தூய்மையான பணத்தைக் கொண்டு அவர் செய்து கொண்டிருக்கும் தொண்டுகளைக் காணும் போது அத்தகைய சேவைகளை என்னாலும் செய்ய முடியுமானால் எவ்வளவு நின்றாக இருக்கும் என்று ஏக்கத்துடன் பார்க்கிறேன். மார்க்கத்திற்காக ஊழியம் புரிந்து அதனை ஆதரிப்பதற்குரிய அரும்பெரும் சந்தர்ப்பங்களை அவர் எவ்வளவு ஆர்வத்துடன் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இறை வல்லமையின் காட்சி என் கண்களுக்கு முன்னால் வந்து நிற்கிறது. இறைவன் தனது உண்மையான அடியார்களை எவ்வாறு தன்பக்கம் ஈர்த்துக் கொள்கின்றான்!



இறைவனுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதன் மூலம் எவையெல்லாம் செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்வதற்கு எல்லா வேலைகளிலும் தனது சேமிப்புத் தொகை அனைத்தையும் செலவிட்டு தனது உடல் வலிமை, வழிவகைகள், வளம் ஆகியவற்றையும் அர்ப்பணிக்க அவர் ஆயத்தமாக இருக்கின்றார். அவர் தமது செல்வத்தை என்ன! தனது உயிரையும், கண்ணியத்தையும், சுய கௌரவத்தையும் கூட என் பொருட்டு தியாகம் செய்வதற்கு அவர் தயங்க மாட்டார் என்ற விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். இதனை நான் அவர் மீது கொண்டிருக்கும் நல்லெண்ணத்தினால் மட்டுமின்றி அவரைப் பற்றிய சரியான ஞானத்தினால் கூறுகிறேன். நான் மட்டும் அனுமதி வழங்கினால் அவர் தன்னிடமுள்ள ஒவ்வொரு பொருளையும் கைவிட்டு விட்டு இங்கு என்னோடு வாழ்வதற்கு வந்திருப்பார். அதாவது, ஏற்கெனவே, ஆன்மீக ரீதியில் எனக்கு அருகே இருப்பதைப் போன்று பௌதீக ரீதியிலும் அவர் எனக்கு அருகே வந்திருப்பார்." (இஸ்லாத்தின் வெற்றி, ரூஹானி கஸாயின் பாகம் 3 பக்கம் 35)

அதனால்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாரை புகழ்ந்து கூறினார்கள்: உம்மத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் நூருத்தீனாக மாறியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? ஒவ்வொரு இதயமும் உறுதியின் ஒளியால் நிரம்பியிருந்தால் இது நடந்திருக்கும்.

அவ்வாறே, காபூலின் தியாகி ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ·ப் ஷஹீத் அவர்கள் இறைவனோடு விசுவாசமாக இருப்பதைக் குறிப்பிட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"சாஹிப் சாதா அப்துல் லத்தீ·ப் அவர்களின் தியாக சம்பவம் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரியாகும். அவர் தனது நம்பிக்கைக்கு ஓர் உதாரணத்தைக் காட்டினார். அவர் உலகத்தைப் பற்றியோ அதன் தொடர்புகளைப் பற்றியோ கவலைப்படவில்லை. அவரது மனைவி மற்றும் குழந்தைகளின் துயரம் அவரது நம்பிக்கையில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. உலக கண்ணியமும், பதவியும், ஆடம்பரமும் அவரை கோழையாக்கவில்லை. அவர் உயிரைக் கொடுப்பதில் தளரவில்லை, ஆனால் நம்பிக்கை இழக்கவில்லை. அப்துல் லத்தீ·ப் கொல்லப்பட்டார் என்று கூறினாலும், அவர் உயிருடன்

இருக்கிறார். ஒருபோதும் இறக்க மாட்டார் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். மனிதனுக்குப் பிரியமுள்ள உயிருக்கு அவர் முன்னுரிமை வழங்கவில்லை. இதைக் குறித்து அவர் இறைவன் முன் நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பேன் என்று வாக்குறுதி அளித்துள்ளார்." (மல்ஃபூஸாத் பாகம் 3 பக்கம் 511-512)

காலத்தின் மஸீஹினால் ஒளியூட்டப்பட்ட விளக்குகளால் தங்கள் தீபங்களை ஒளியூட்டுபவர்கள் பாக்கியவான்கள். விளக்குகள் அணைவதற்கு முன்பு தங்கள் தீபங்களை ஏற்றி வைப்பவர்கள் பாக்கியவான்கள். இறைவனின் அன்புக்குரியவர்-களிடமிருந்து ஒளியைப் பெற்றுக் கொள்ளும் இவர்களே உறுதிவாய்ந்த கோட்டையாக இருக்கிறார்கள். மேலும் இவர்களால் உலகம் பல தீமைகளிலிருந்து பாதுகாக்கப்-படுகிறது.

### கீழ்ப்படிதலின் உண்மைத்தன்மை


கீழ்ப்படிதலின் உண்மைத்தன்மையை விளக்கியவாறு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி அவர்கள் கூறுகின்றார்கள்: "கீழ்ப்படிதல் என்பது ஒருவர் விருப்பத்திற்கு ஏற்ப கட்டளைகளைப் பின்பற்றுவது என்பதன்று. மாறாக, எல்லாம் வல்ல இறைவனின் ஒவ்வொரு கட்டளையின்படியும் செயல்படுவதாகும். அ(க்கட்டளையான)து ஒருவருடைய பழக்க-வழக்கத்திற்கு எதிராகவோ அல்லது இயல்புக்கு எதிராகவோ இருந்தாலும் சரியே!" (தஃப்ஸீரே கபீர் பாகம் 2 பக்கம் 15)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "கிலாஃபத்திற்கு எதிராக கண்ணியமில்லாது நடந்துகொள்பவர்களின் நல்ல முடிவை நான் பார்த்ததில்லை. அவர்களும் அழிந்தனர், அவர்களுடைய சந்ததியும் அழிந்தது. எனவே, எப்போதும் முழுமையான கட்டுப்படுதலுடன் கிலாஃபத்திற்கு கீழ்படிதலுக்கான உறுதிமொழி எடுத்து, அதில் நிலைத்திருங்கள்."

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 21-31 மே 2021 பக்கம் 92)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், கீழ்ப்படிதலின் நுணுக்கத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றாகள்: "கீழ்ப்படிதலின் தரத்தை பெறுங்கள். காலத்தில் கலீஃபா அல்லது நிஸாமே ஜமாஅத்தின் (ஜமாஅத் கட்டமைப்பின்) கட்டளைகள் தமது விருப்பத்திற்கு ஏற்ப இருந்தால் மட்டுமே அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வது. அது தமது விருப்பத்திற்கு ஏற்ப இல்லை எனில் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி அதில் ஆட்சேபனை செய்ய தொடங்கி விடுவது என்பது கீழ்படிதல் ஆகாது." (குத்பா ஜுமுஆ அக்டோபர் 11, 2013)

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 18.01.2022)



"நான் நபி மட்டுமல்ல. மாறாக, ஒரு வகையில் நபியாகவும் இன்னொரு வகையில் உம்மத்தி (இந்த சமுதாயத்தைச் சார்ந்தவன்) ஆகவும் இருக்கின்றேன். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலும், முழுமையான அருளும் நிரூபிக்கப்படுகின்றது. மனிதத் தன்மையின் அனைத்து முழுமைகளின் தொகுப்பாக இருந்த அத்தகைய ஒரு நபியை பின்பற்றுபவனாக நான் இருக்கின்றேன். அவர்களது ஷரீஅத் முழுமையானதாகவும் நிறைவானதாகவும் இருந்தது. முழு உலகின் சீர்திருத்தத்திற்காகவும் அது இருந்தது. எனவே, முழு உலகத்திற்கும் அவசியமானதாக இருந்த அந்த ஆற்றல்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 157–159)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam